வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු
Email : news@eelanadu.lk மலர் : 04 10.04.2023 திங்கட்கிழமை இதழ் : 121 பக்கங்கள் : 16






## வவுனியா - செட்டிக்குளத்தில் முளைத்தது புத்தர் சிலை!

வவுனியா, ஏப். 10

வவுனியா - செட்டிக்குளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் திடீரெனப் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. செட்டிக்குளம் முருகன் ஆலயம் அருகேயே இந்தப் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்கான முயற்சியா என்று தமிழ் மக்கள் கேள்வியும் அச்சமும் தெரிவித்துள்ளனர்.

செட்டிக்குளம் - மன்னார் வீதியில், பழைய புகையிரத நிலையம் முன்பாக - முருகன் கோவில் அண்மையாக, வீதியோரத்தில் சிமெந்து

15

## 5 நாட்களில் விபத்தில் 25 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 10

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த 5 நாட்களில் மட்டும் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 25 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 5 நாட்களில் 270 வீதி விபத்துக்கள் இடம்பெற்று

15

## ஈழத் தமிழருக்கு சமமான உரிமை வழங்க வேண்டும்!

### இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க இந்திய பிரதமரிடம் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஏப். 10

ஈழத் தமிழர்களுக்கு சமமான உரிமைகள் அளிக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று

15

# கச்சதீவில் புத்தர் சிலை; இந்தியா கடும் ஆட்சேபம்!

கொழும்பு, ஏப்ரல் 10

**கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு இந்தியா கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் பாதுகாப்பு சார் அதிகாரிகள் குழு ஒன்றும் பங்கேற்றது.**

15

## நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதில் அரசாங்கம் தீவிரம்!

கொழும்பு, ஏப். 10

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக அரசாங்கம் தேசிய நல்லிணக்க ஐக்கிய ஆணைக்குழுவை நிறுவவுள்ளது. இதில், 21 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இந்தக் குழு பாலினம் உட்பட இலங்கையின் பல்லினத் தன்மையை பிரதிநிதித்துவம் செய்யும்.

கடந்த வாரம் அமைச்சரவை இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை ஏற்றுக்கொண்டது. தற்போது இந்த சட்டமூலத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் சட்ட வரைவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான ஆவணத்தை இன நல்லிணக்க முயற்சியுடன் தொடர்பு

15

## கச்சதீவில் அந்தோனியாரும் புத்தரும் ஆயுதப் படைகளாலேயே அமைந்தன!

### மறவன்புலவு சச்சிதானந்தன் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப். 10

கச்ச தீவில் துப்பாக்கி முனையில் படையினர் துணையுடன் அமைந்தவையே அந்தோனியார் கோயிலும் புத்தர் கோயிலும். இருவருமே கச்ச தீவுக்கு அந்நியர் என்று கூறியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

அத்துடன், அந்தோனியார் ஆலயத்தை கட்டுவதற்காக இடிக்கப்பட்ட பல்லாயிரம் ஆண்டு பழமையான சிவன் ஆலயத்தின் இடிபாடுகள் நெடுந்தீவில் இன்றும் உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

15

## தன்னிடம் கேள்வி எழுப்பியவரிடம் முறையற்று நடந்த கஜேந்திரகுமார்!

லண்டன், ஏப். 10

புலம்பெயர் உறவுகளுடனான நிகழ்வு ஒன்றில் தம்மிடம் கேள்வி எழுப்பிய நபரிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. அநாகரிகமாக நடந்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

லண்டனில் நடந்த இந்த சந்திப்பில் புலம்பெயர் தமிழர் ஒருவர் "கடந்த 13 வருடங்களாக நாம் என்ன செய்து கொண்டு இருக்கிறோம்", என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு கஜேந்திரகுமார் எம். பி. " நீ எந்த அமைப்பைச் சேர்ந்தவன். பி. ரி. எவ்வா? (பிரிட்டிஷ் தமிழ் போரம்), நாடு கடந்த தமிழீழ அரசா?

15



உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று யாழ்ப்பாணம் - நாவாந்துறை புனித நீக்கிலார் தேவாலயத்தில் இடம்பெற்ற உயிர்ப்பு பெருவிழாவின்போது...!

## தொன்மைமிகு நயினாதீவிலும் சிங்கள மயமாக்கல் தீவிரம்!

நயினாதீவு, ஏப். 10

தமிழரின் தொன்ம வரலாற்றுடன் தொடர்புடைய நயினாதீவையும் சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

குறிகாட்டுவான் - நயினாதீவு படகு சேவையில் நாகதீபய என்ற சிங்களப் பெயரால் குறிப்பிடும்படியான பற்றுச்சீட்டுகள் தற்போது வழங்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



இதேசமயம்,

15

## வெடுக்குநாறிமலை ஆலயத்தில் விக்கிரகங்கள் மீளவும் பிரதிஷ்டை!

### மீண்டும் சொல்கிறார் டக்ளஸ்

மட்டக்களப்பு, ஏப். 10

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவில் பிரச்னையில் நடந்திருப்பது தவறு. அது யார் செய்திருந்தாலும் தவறு. மீண்டும் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலில் சிலை நிறுவப்படும். அதற்கு ஆளுநருடையதோ பிரதமருடைய அனுமதியோ பெறவேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்தார்.

மட்டக்களப்பு மத்திய வீதியில்

15

## தமிழரின் இருப்பை பாதுகாக்க பொதுக் கட்டமைப்பு உருவாக்கம்!

வவுனியா, ஏப். 10

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்கும் என்று பொதுக்கட்டமைப்பு ஒன்று வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உருவாக்கப்பட்டது.

தமிழர் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மற்றும், பௌத்த மயமாக்கல் போன்ற செயல்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## செட்டிகுளத்தில்...

கற்களை அடுக்கி சுமார் ஒன்றரை அடி உயரமுடைய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் அந்தப் பகு திக்கு வந்த சிலரே கற்களை அடுக்கி புத்தர் சிலையை வைத்து விட்டு அங்கிருந்து சென்றனர் என்று அறிய வருகின்றது.

தமிழ் மக்கள் மட்டுமே செறிந்து வாழும் இந்தப் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை அவர்களிடையே அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## ஈழத்...

முன்தினம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார். அவரை வரவேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் சில கோரிக்கைகளை வலியுறுத்தி மனு ஒன்றைக் கையளித்தார்.

அதில், "ஈழத் தமிழர்களுக்கு சமமான குடிமுறை மற்றும் அரசியல் உரிமைகள் அளிப்பது தொடர்பாக இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்", என்று கூறியுள்ளார்.

மேலும், கச்சதீவில் இந்தியாவின் இறையாண்மையையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் கோரியுள்ளார். (ஐ)

(தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம் - 4இல்)

## 5நாட்களில்...

உள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன், பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவித்த அவர், பொது மக்கள் வாகனங்களை அவதானத்துடனும் பொறுப்புடனும் செலுத்துமாறு கேட்டுள்ளார். (ஐ)

## வெடுக்குநாறி...

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பணிமனையை நேற்று திறந்து வைத்த பின்னர் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இன்றைய நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளை தனிப்பட்ட முறையில் அழைத்த போது, ஒரு கட்சியை தவிர ஏனைய எதிர்கட்சிகள் தேர்தல் வேண்டாம் என கோரிக்கை முன்வைத்துள்ளன. தேர்தலுக்கு எதிராக யாரும் செயல்படமாட்டர்கள்.

உலகத்திலே எல்லா நாடுகளும் தங்களுடைய நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், பெயர்கள் வித்தியாசப்படலாம். இலங்கையில் தமிழ் பேசும் மக்களால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று அந்த நிலைமை இல்லை. ஆனால், நாட்டை நிர்வகிப்பதற்கு சட்டம் தேவை.

எனவே இது புதிதானதல்ல. ஆளும் கட்சிகள் ஏதாவது ஒன்றை செய்யும் போது எதிர்க்கட்சிகள் எதிர்பதுதான் இங்குள்ள யதார்த்தம். அந்த வகையில் எதிர்கட்சிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனரே தவிர இந்த சட்டத்தில் பிழை இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால், இந்த பயங்கரவாத தடைச் சட்ட திருத்தம் தொடர்பாக நாங்கள் கட்சி என்ற வகையில் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் பாராளுமன்றம் வரும்போது எங்கள் கருத்துக்களை தெரிவிப்போம். நாட்டுக்கு சட்டங்கள் தேவை.

நீண்டகாலமாக தமிழ் மக்களுடைய பிரச்னைகளுக்கு இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்ட மூலமான மாகாண சபை முறைமை ஊடாகத்தான் பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம். இதையே நீண்டகாலமாக வலியுறுத்துகிறேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழரின்

அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக, தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் பௌத்தமயமாக்கல் செயல்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வனவளத் திணைக்களத்தினரால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக இனம் காண்பதற்காக 7 பேர் கொண்ட கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அத்துடன், அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வட - கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைகழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, சிறீ தமிழீழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பி னரும் கலந்துகொண்டனர்.

## கச்சதீவில் புத்தர்...

இதன்போது, கச்சதீவில் கடற்படையினரால் புத்தர் சிலை நிறுவப்படுவது தொடர்பில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை - கண்டனங்களை தெரிவித்துள்ள னர் என்று வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி சுட்டிக்காட்டினார்.

வெளிவிவகார அமைச்சரின் கருத்துகளை கவனமாக செவி மடுத்த அரச தலைவர், யாரும் எதிர் பார்க்காத பதிலை அவருக்கு வழங் கினார் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி யின் செயலணிகளின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லிணக்க...

பட்ட முக்கிய பங்குதாரர்களிடம் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.

அனைத்து உறுப்பினர்களும் சட்டம், மனித உரிமைகள், மனிதாபிமான சட்டம், வரலாறு, சமூக அறிவியல், உளவியல், மோதலுக்குப் பிந்தைய மற்றும் நல்லிணக்க ஆய்வுகள் தொடர்பான துறைகளில் அவர்களின் அறிவு அல்லது நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் நேர்மை மற்றும் நம்பகத்தன்மை கொண்ட நபர்களாக இருக்க வேண்டும். அல்லது விசாரணை மற்றும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தொடர்புடைய பிற தகுதிகளைக் கொண்டிருக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவுககான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். அவர்கள் மூன்று வருடங்களுக்கு பதவி வகிப்பார்கள். அரசமைப்பு பேரவை 3 உறுப்பினர்களை பரிந்துரை செய்யும். அவர்களில் ஒருவரை ஜனாதிபதி தலைவராக நியமிப்பார்.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பல அம்சங்கள் உத்தேச சட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. 2018இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த வேளை உருவாக்கப்பட்ட நகல் சட்டத்திலும் தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பல அம்சங்கள் காணப்பட்டன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# புத்தளத்தில் உயிருடன் கரைக்கு வந்த டொல்பின் ஆழ்கடலில் விடப்பட்டது!



புத்தளம், ஏப். 10

புத்தளம் களப்பு பகுதியில் டொல்பின் ஒன்று நேற்று காலை உயிருடன் கரையொதுங்கியது.

இது குறித்து அப்பகுதி மக்கள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சென்று குறித்த டொல்பினை மீனவர்களின் இயந்திரப் படகின் உதவியுடன் ஆழமான பகுதிக்குக் கொண்டுச் சென்று விடுவித்தனர்.

குறித்த டொல்பின் போத்தல் மூக்கு டொல்பின் இனத்தைச் சார்ந்தது எனவும் சுமார் 7 அடி நீளமுடையது என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# வாழ்வாதார உதவி தொகை; ஜூன் முதல் ஆரம்பமாகும்!

கொழும்பு, ஏப். 10

வாழ்வாதார உதவித் தொகைகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 32 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்களின் சரிபார்ப்பு நிறைவடைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் நலன்புரி கொடுப்பனவுகளுக்கு தகுதியானவர்களை அடையாளம் காணும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நாடுமுழுவதும் உள்ள 340 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட 37 இலட்சம் விண்ணப்பங்கள் தொடர்பான நலன்புரி கொடுப்பனவுகளுக்கான தகுதி சரிபார்ப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

மதிப்பீட்டு காலம் முடிந்ததும், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீது மேன்முறையீடு செய்ய அனுமதிக்கப்படும் என்று நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர் ஜூன் மாதம் முதல் புதிய திட்டத்தின் மூலம் கொடுப்பனவை வழங்குவதற்கு சபை நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கச்சதீவில்...

"கச்சதீவில் புனித அந்தோனியார் திருத்தலத்தைத் தவிர வேறெந்த அடையாளங்களோ, கட்டமைப்புகளோ அமையக்கூடாது என்ற பாரம்பரியம் மீறப்படக்கூடாது", என்று குறிப்பிட்டு யாழ்ப்பாணம் மறை மாவட்ட குரு முதல்வர் ப. யோ. ஜெபரட்ணம் அடிகள் மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் எழுதியிருந்தார். அவரின் இந்தக் கடிதம் தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவரின் அறிக்கை அப்படியே வருமாறு,

"கச்சதீவில் துப்பாக்கி முனையில் படைவீரர் துணையுடன் அமைந்தவையே அந்தோனியார் கோயிலும் புத்தர் கோயிலும். அந்தோனியார் மேலை நாட்டவர். புத்தர் வட நாட்டவர். இருவரும் கச்சதீவுக்கு அந்நியர் என்று தெரிவித்துள்ளார் கச்சதீவின் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிவன் கோயிலின் இடிபாடுகள் (அந்தோனியார் கோயில் கட்டுவதற்காக இடிக்கப்பட்டன) இன்றும் நெடுந்தீவில் உள்ளன. அகற்ற வேண்டியன ஆக்கிரமிப்புக் கோயில்கள். அமைக்க வேண்டியன தமிழ் மரபின் அடையாளக் கோயில்கள்.

இலங்கை அரசமைப்பில் புத்த சமயத்துக்கு முன்னுரிமை. வேறு மதத்தவருக்கு இடமில்லை எனச் சுட்டுவதே. சிவ பூமியான மன்னாரைக் கத்தோலிக்க மறை மாவட்டம் வத்திக்கானின் நேரடி ஆட்சியில் உள்ள மாவட்டம் என்பவர் மன்னார் ஆயர்.

இலங்கை அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றி - மன்னார் ஆயரின் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றி - யாழ்ப்பாண ஆயரும் கச்சதீவில் பிற மதத்துக்கு இடம் இல்லை என்கிறார் ஆக்கிரமிப்பாளராக - என்று கூறியுள்ளார். (ஐ)

## தன்னிடம்...

என்று கேட்டார். அத்துடன் அவர் எழுப்பிய கேள்விக்கும் பதிலளிக்க மறுத்துள்ளார்.

கஜேந்திகுமாரின் இந்த செயல்பாடு லண்டன் வாழ் தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## தொன்மை....

இரவோடு இரவாக அங்குள்ள வீதி ஒன்றுக்கு சிங்களத்தில் தேரர் ஒருவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த வீதியின் பெயர் பலகையில் 'அதிமேதகு சங்கைக்குரிய பிரஹ்மனவத்தே தம்மகீர்த்தி திஸ்ஸ பெரஹெர மாவத்தை' என்று மாற்றப்பட்டுள்ளது.

கடற்படையினராலேயே இந்த வீதிக்கான பெயர் இவ்வாறு பொறிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக நயினாதீவுக்கு தமிழிலும் "நாகதீப" என்ற சிங்களப் பெயரை வர்த்தமானியில் அரசு பிரசுரித்தது. இதற்கு அப்போது கடும் எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து பின்வாங்கியது.

இந்த நிலையில், தமிழர் தாயகப் பகுதியில் தீவிர சிங்கள மயமாக்கல் இடம்பெற்று வரும் வேளையில் நயினாதீவையும் சிங்கள மயமாக்கும் முயற்சிகள் தீவிரமாகியுள்ளன என்பது குறிப பிடத்தக்கது. (ஐ)

# சிறுவர்கள் துஷ்பிரயோகம் கிறிஸ்தவ போதகர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 10

இருபாலையில் சட்ட விரோதமான முறையில் இயங்கிய சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுமிகள் 80 வயதான தலைமை போதக ரால் பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உள்ளாக்கப்பட்ட னர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இருபாலை பகுதியில் கிறிஸ்தவ சபை ஒன்றால் சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்ட சிறுவர் இல்லத்தில் இருந்து 16 சிறுவர்கள் அண்மையில் மீட்கப்பட்டனர்.

அந்த சிறுவர் இல்லத்தில் இருந்த அருட்சகோதரி ஒருவர் உள்ளிட்ட மூவர் பொலிஸாரினால் கைது செய் யப்பட்டு , நீதிமன்றில் முற் படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மீட்கப் பட்ட சிறுவர்களிடம் பொலி ஸார் மற்றும் சிறுவர் நன்ன டத்தை பிரிவினர் விசாரணை களை முன்னெடுத்து வருகின் றனர்.

விசாரணைகளின்போது , தாம் தவறு இழைத்தால் பிளாஸ்ரிக் பைப் ஒன்றில் மண்ணை நிரப்பி அதனால் அடிப்பார்கள் என சிறுவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தாம் இல்லத் தில் துன்புறுத்தப்படுவது தொடர்பில் கல்வி கற்கும் பாடசாலை ஆசிரியர்கள் பல ரிடம் முறையிட்ட போதும் அவர்கள் எந்த நடவடிக்கை யும் எடுக்காது எமது இல்ல போதகரிடம் நாம் கூறிய வற்றை கூறி விடுவார்கள்.

அதனால், நாம் ஆசிரியர் களிடம் முறையிட்டமைக் காக மீண்டும் இல்லத்தில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவோம் என சிறுவர்கள் விசாரணைகளில் தெரிவித் துள்ளனர்

அதேவேளை, சிறுவர் இல் லத்தில் இருந்த 80 வயதான தலைமை போதகர் சிறுமி களை பாலியல் துஷ்பிரயோ கங்களுக்கு உள்ளாக்கியத்து டன், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற் கொண்டுள்ளார்.

இதனை அடுத்து தலைமை போதகரை பொலிஸார் கைது செய்ய நடவடிக்கை எடுத்த போது அவர் தலைமறைவாகியுள் ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்பவத்துடன் தொடர்பு டைய போதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# புத்தாண்டை கொண்டாட ஜனாதிபதி ரணிலே காரணம்!

## வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, ஏப். 10

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை கொண்டாடுவ தற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்றும் ஒரு கும்பலால் வங்கு ரோத்து செய்யப்பட்ட நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூக்கி நிறுத்து கிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாள ரும் எம். பியுமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

வஜிர எம். பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரத்துக்கு பின்னர் நாடு பிளவுபட்டு பிரிந்தது என்றும் பல்வேறு சித்தாந்தங் களால் அது சரிந்துவிட்டது என்றும் குறிப்பிட்ட அவர், வங்குரோத்து அடைந்த நாட்டை ஜனாதிபதியே தூக்கி நிறுத்துவதாக சுட் டிக்காட்டினார்.

அதற்கு முழு இலங்கை மக்களும் ஆதரவளிக்க வேண் டும் என்றும் குறிப்பிட்ட அவர், ஏனைய விடயங்க ளைச் செய்வதன் மூலம் வேலைத்திட்டத்தை எப்படி யாவது சீர்குலைத்தால் அதற்கு அந்தக் குழுக்கள் பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ஐ)

# முறைகேடான வர்த்தகர்கள் 24 மணி நேரமும் அறிவியுங்கள்!

கொழும்பு, ஏப். 10

முறைகேடான வர்த்தகர் கள் தொடர்பான முறைப் பாடுகளை பொதுமக்களுக்கு வழங்க விசேட தொலைபேசி இலக்கத்தை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த எண் 24 மணி நேரமும் செயல்படும் என்று திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தரமற்ற எடை மற்றும் அளவீட்டு உபகர ணங்களைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளை 011 218 2253 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொது மக்கள் தெரிவிக்க முடியும். (ஐ)

# ரோந்து சென்ற சிப்பாயின் துப்பாக்கி கடலில் விழுந்தது!

மன்னார், ஏப். 10

தலைமன்னார் கடலில் இந்திய படகுகளை கண் காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படை சிப்பாய் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கி கடலில் விழுந்து காணாமல் போயுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மன்னார் கடற்படை முகா மைச் சேர்ந்த குழு வொன்று கண்காணிப்பு ரோந்து நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்த போதே துப் பாக்கி கடலில் விழுந்துள்ள தாகக் கூறப்படு கிறது.

இது தொடர்பில் மன் னார் கடற்படை அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் மன்னார் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்துள் ளார். (ஐ)

# சந்திரசேகர பிள்ளையாருக்கு இன்று மஞ்சத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஏப். 10

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு கைலாச வாகனத் திருவிழா வும் நடைபெறவுள் ளன.

எதிர்வரும் வியா ழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் சனிக்கிழமை காலை 8 மணிக் குத் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு கொடி இறக்கமும் நடைபெறும். (ஐ)



# இப்படியும் நடக்கிறது...!

கடந்த வெள்ளியன்று 'ஈழநாடு'வின் தலையங்கத் தைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து பேசி னார்.

தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் அப்போதைய தலை வர் அமிர்தலிங்கத்துடன் நெருக்கமானவர் அந்த நண் பர்.

இலங்கை - இந்திய ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்ட பின் னர் நடந்த, இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடாதமை குறித்து 'ஈழநாடு' எழுதியிருந்த கருத்துக்குறித்து நீண்ட விளக்க மளித்தார் அந்த நண்பர்.

"இலங்கை - இந்திய ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்ட பத்து நாட்களின் பின்னர் சென்னை யில் கூட்டம் ஒன்றில் பேசிய அமிர்தலிங்கம், 'இப்போது தான் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகின்றது', என்று கூறியிருந்தார். இவ்வாறு கூறிய அமிர்தலிங்கம் எதற்காக மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து பின் வாங்கினார். நிச்சயமாக அது கொள்கை சார்ந்த பிரச்னை யில்லை. மாறாக அன்று பலமாகவும் - இந்தியாவுடன் முரண்பட்டுக் கொண்டுமிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை - விரோதித்துக் கொள்ள அமிர்தலிங்கம் விரும்ப வில்லைபோலும்.

ஏனெனில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்ற - அதனைப் போற் றிய ஒருவர் மாகாண சபை தேர்தலை நிராகரிப்பதற்கான எந்தவோர் அவசியமுமில்லை.", இதுதான் 'ஈழநாடு' தனது தலையங்கத்தில் சுட்டிக் காட்டியிருந்த விடயம்.

இது பற்றிய தனது கருத் தைக் கூறுவதற்காகவே நண்பர் லண்டனிலிருந்து தொடர்பு கொண்டிருந்தார்.

'அந்தக் காலத்தில் அமிர்த லிங்கத்தோடுகூட இருந்தவர் அவரின் இளைய புதல்வர் டாக்டர் பகீரதன். இப்போ தும் லண்டனில்தான் இருக்கிறார். அவரிடம் பேசினால் ஏன் அவர்கள் போட்டியிடவில்லை என்பதை அறிந்துகொள்ள லாமே' என்றார்.

'அவரிடம் பேசுவது இருக்கட்டும், ஏன் அவர்கள் போட்டியிடவில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?' என்று அவரிடம் கேட் டேன்.

'விடுதலைப் புலிகள் இயக் கத்துக்கும் அமைதிப் படை யாக இலங்கை வந்திருந்த இந்திய இராணுவத்துக்கும் இடையே கடும் மோதல் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேர்தலை எப்படியாவது நடத்திவிட வேண்டும் என்று இந்தியா விரும்பியது.

ஆனால், அந்தத் தேர்தலில் போட்டியிடுவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவெடுத்திருந்தால், அந்த கட்சி சார்பில் போட்டியிடு கின்ற வேட்பாளர்கள் உயிரா பத்தை எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கும். கொழும்பில் அப்போது பாதுகாப்புடன் கூட்டணித் தலைவர்கள் இருந்துகொண்டு தேர்தலில் போட்டியிட வடக்கு - கிழக் கிலுள்ள தமது செயல்பாட்டா ளர்களை தேர்தலில் களம் இறக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது நான் சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டுமா என்ன? தமது செயல்பாட்டாளர்களின் பாதுகாப்பு கருதியே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்த லில் கலந்து கொள்ளவதைத் தவிர்த்திருக்கும் என்றே நினைக்கின்றேன்' என்றார் அந்த நண்பர்.

ஏற்கனவே தமது இரண்டு தலைவர்களான மானிப்பாய் வி. தர்மலிங்கம், கோப்பாய் மு. ஆலாலசுந்தரம் ஆகி யோரை பறிகொடுத்திருந்த கூட்டணி, மாகாண சபைத் தேர்தலில் களம் இறக்கி தமது செயல்பாட்டாளர்களை இழக்க விரும்பியிருக்காது என்பது புரிந்துகொள்ளக் கூடிய துதான்.

இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டு கிழக்கு மாகாண சபைக்கு முதன்முறையாக தேர்தல் நடைபெற்றபோது அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. அதற்கான காரணத்தை அறிய ஆராய்ச்சி தேவையில்லை. அப்போது சுடக்கில் விடுத லைப் புலிகள் 'ஆட்சியில்' இருந்தனர். அவர்களின் விருப்பத்துக்கு மாறாக தேர்தலில் போட்டியிடும் துணிவு கூட்டமைப்பிடம் இருக்கவில்லை.

ஆனால், இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு மீண்டும் கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடை பெற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டி ருந்தது. அப்போது விடுத லைப் புலிகள் இயக்கம் இருக்க வில்லை.!

ஆனால், தமிழர் விடுத லைக் கூட்டணியின் நிலை வேறு. அவர்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டி யிட்டிருந்தால், தமது வேட்பா ளர்களை காப்பாற்ற அவர்க ளால் முடிந்திருக்காது.

அப்போதைய நிலைமைகள் குறித்து அமிர்தலிங்கம் பகீதர னிடம் ஒரு விளக்கமான விவரங்களைப் பெற்று வாசகர் களுக்கு தர முயற்சிக்கின் றோம்.!

- ஊர்க்குருவி

Eelanadu
10.04.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதி கனவு?

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் உடைவுகள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை சமாளிக்க முடியாமல் சஜித் பிரேமதாஸ நெருக்கடிகளை சந்தித்திருக்கிறார் என்றும் ஒரு பார்வையுண்டு. ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அரசியல் அரங்கில் பிரவேசித்தமையைத் தொடர்ந்து, நிலைமைகள் வேகமாக மாற்றமடைந்து வருகின்றதா என்னும் கேள்வி எழுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பதில் பயனில்லையென்றுதான் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறினார். சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் அவருடன் வெளியேறினர்.

பொதுவாக, தென்னிலங்கை அரசியலில் உடைவுகள் ஏற்படுவது கொள்கை சார்ந்த ஒன்றல்ல – ஆனால், அனைவருமே கொள்கை பற்றித்தான் பேசுவர். இது தமிழ் அரசியல் சூழலுக்கும் இப்போது அதிகம் பொருந்திப் போகின்றது. பொதுவாக அரசியல்வாதிகள் கொள்கை தொடர்பில் பேசிக் கொண்டாலும்கூட தேர்தல் வெற்றிக்கான கணக்குகளின் அடிப்படையிலேயே உடைவுகள் ஏற்படுகின்றன. சஜித் பிரேமதாஸவுடன் சென்றால் தங்களின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தலாமென்றுதான் பலரும் அவருடன் சென்றனர். மற்றும்படி ரணில் விக்கிரமசிங்கவுடன் கொள்கை ரீதியில் முரண்பட்டுச் செல்லவில்லை.

ரணில் விக்கிரமசிங்க சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லாதவர். அவருடன் இருந்தால் தங்களால் வெற்றிபெற முடியாதென்றே பெரும்பாலான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பினர். ஆனால், நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய போது சஜித் பிரேமதாஸ விரைந்து செயலில் இறங்கவில்லை. நாட்டை மீட்பதற்கான தலைமைத்துவத்தை வழங்க முன்வரவில்லை. இந்த இடத்திலிருந்து சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவம் தொடர்பான கேள்விகள் எழத் தொடங்கின. இப்போது அது மெதுவாக உடைவை நோக்கிச் செல்கின்றது.

நாட்டை ஆபத்திலிருந்து மீட்கக் கூடிய ஒருவரென்னும் பார்வையை ஏற்படுத்துவதில் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பெற்றிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் முன்னைய வீழ்ச்சி நிலையில்தான் இருக்கின்றது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஓர் ஆளுமை என்னும் வகையில் உயர்ந்திருக்கின்றார். அவர் முன்னரும் ஆளுமைமிக்க அரசியல்வாதியாகவே இருந்தார். ஆனால், வாக்குகளுக்காக வளைந்து கொடுக்காத அவரின் அரசியல் அணுகுமுறைகள் அவருக்கு தொடர்ந்தும் பின்னடைவையே ஏற்படுத்தின.

தென்னிலங்கையில் எவராலும் நெருங்க முடியாதவோர் அனுபவமும் ஆற்றலும் சர்வதேச அங்கீகாரமும் கொண்ட ஒருவராக இருந்தபோதிலும்கூட, சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் ரணில் ஒரு தலைவராக நோக்கப்படவில்லை. தங்களுக்கான தலைவரென்று ரணிலைப் பார்ப்பதற்கு பெரும்பான்மையான சிங்களவர்கள் தயங்கினர். ரணிலின் தோற்றம், பேச்சாற்றலின்மை, மேற்குலக அரசியல்வாதிகள் போன்ற தோற்றம் – இவைகள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து ரணிலை தொடர்ந்தும் அந்நியப்படுத்தவே பயன்பட்டன. ஆனால், இப்போதும் ரணில் பதவிக்காக தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. நாட்டை என்னால் கட்டியெழுப்ப முடியும் – என்னால் மட்டும்தான் முடியும். வாய்ப்பை தந்தால் நான் அதனை செய்வேன் என்றவாறான முரட்டு சுபாவத்துடனேயே செயல்படுகின்றார். பதவிக்காக தன்னை மாற்றிக் கொள்ளாத ஓர் அரசியல்வாதியாகவும் ரணில் தென்படுகின்றார்.

எனவே, இவ்வாறான சூழலில் ஜனாதிபதி தேர்தலில் ரணிலை எதிர்கொள்ளக் கூடியதொரு வேட்பாளராக சஜித் பிரேமதாஸவால் நிற்க முடியுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. ரணில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் அதன் பின்னர் நிலைமைகளை சமாளித்துவிடுவார். பாராளுமன்றத்தையும் கைப்பற்றுவதற்கான வியூகங்களை வகுப்பார். அவருக்கு மேற்குலகத்தின் முழுமையான ஆதரவுண்டு. இந்த நிலையில் தேர்தல் வெற்றியென்று நோக்கினாலும் ரணிலுடன் நிற்பது தங்களுக்கு வாய்ப்பானதா – என்று எதிரணியிலுள்ளவர்கள் சிந்திக்கலாம். அவர்கள் அவ்வாறு சிந்தித்தால் நிச்சயம் ஐக்கிய மக்கள் சக்தியில் உடைவுகள் தவிர்க்க முடியாதவை.

# வெளிநாட்டு நிறுவனங்கள் வருகையால் எரிபொருட்களின் விலை குறைவடையும்!

## எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்கும் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விற்பனை செய்யும் விலையை விடக்குறைவாக எரிபொருளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

மூன்று நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் இந்த மாத இறுதியில் முடிவடையும், அதன்பிறகு ஒரு மாதத்திற்குள் அதன் செயல்பாடுகள் ஆரம்பமாகும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலிய ஐக்கிய பெற்றோலிய நிறுவனம், அமெரிக்காவின் ஷெல் பி. எல். சி. நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையை விடக் குறைந்த விலையில் எரிபொருளை விற்க அனுமதித்தால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருளுக்கான தேவை குறையலாம். எனவே, அரசாங்கத்தின் எரிபொருள் செலவும் குறைக்கப்படலாம் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கம் சராசரியாக மாதமொன்றுக்கு 45 கோடி அமெரிக்க டொலர்களை எரிபொருளுக்காகச் செலவழித்து வருகிறது. இந்தநிலையில், குறித்த மூன்று நிறுவனங்களும் சராசரியாக 12 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளை மாதாந்தம் இறக்குமதி செய்யும் என அமைச்சு எதிர்பார்த்துள்ளது. இந்த நடவடிக்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால், வாடிக்கையாளர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு வரும் மூன்று நிறுவனங்களும் இறக்குமதிக்கான அமெரிக்க டொலர்களை திரட்ட உள்ளூர் வங்கிகளைப் பயன்படுத்துவதை நிறுவனங்கள் தவிர்க்க வேண்டும். அதே நேரத்தில், இலாபத்தை ஒரு வருடத்துக்குப் பின்னரே நாட்டிற்கு வெளியே எடுத்துச்செல்ல முடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மூன்று நிறுவனங்களும் கூட்டாக வருடத்துக்கு 220 கோடி அமெரிக்க டொலர்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்யும் என்றும் இது திறைசேரியின் சுமையை குறைக்கும் என்றும் எரிபொருள் அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போது சுமார் 1,200 நிரப்பு நிலையங்கள் உள்ளன. புதிய நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு பின்னர், பெற்றேலியக் கூட்டுத்தாபனத்திடம் சுமார் 700 எரிபொருள் நிரப்பு நிலையங்களே எஞ்சியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மணல் அகழ்வு நடவடிக்கைக்காக எல்லை பிரிப்பதை ஏற்க முடியாது!

## அம்பன் கிராமம் சென்ற சுமந்திரன்

வடமராட்சி, ஏப். 10

மணல் அகழ்வு நோக்கத்துக்காக அம்பன் கிழக்கு மற்றும் அம்பன் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் எல்லைகள் பிரிக்கப்படுவதை ஏற்க முடியாது என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் மகேஸ்வரி நிதியம் மணல் அகழ்ந்த இடங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார் எம். ஏ. சுமந்திரன் எம்.பி.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

வடமராட்சி கிழக்கு கொட்டோடை பகுதியில் மகேஸ்ரி நிதியத்தால் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை சுமார் பத்து இலட்சம் கியூப் மணலுக்கும் அதிகமாக அகழப்பட்டுள்ளது.

கனிய வளங்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மணல் அகழ்வானது நில மட்டத்துக்கு மேலாக மூன்று அடிக்கு மேல் அகழப்பட வேண்டும் ஆனால், மகேஸ்வரி நிதியம் கடல் மட்டத்திலிருந்து சுமார் மூன்று அடிக்கும் அதிகமாக இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு அகழப்பட்டுள்ளது.

இதேவேளை, மணல் அகழ்வு நோக்கத்துக்காக அம்பன் கிழக்கு மற்றும் அம்பன் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் எல்லைகள் பிரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று மக்கள் கூறுகின்றனர். இந்த நடவடிக்கையை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார். (ஐ-2)

# கணவன் தாக்கியதில் மனைவி உயிரிழப்பு!


கொழும்பு, ஏப். 10

ஒரு பிள்ளையின் தாயான தனது மனைவியை தாக்கி கொலை செய்த கணவரை அரநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்றபோது அவர் சமையல் அறையில் இரத்த வெள்ளத்தில் சடலமாக கிடந்ததாக தெரிவித்தனர்.

23 வய தான இளம் தாயொருவரே கொல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**இடபம்**
நம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். உத்தியோகத்தில் உங்களை எல்லோரும் மதிப்பார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**கடகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**சிம்மம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் அதிரடியான சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வீடு மனை வாங்குவது லாபகரமாக அமையும். உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். புது நட்பு மலரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி இருக்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியருடன் விட்டுக்கொடுத்துப் போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வாடிக்கையாளர்களுடைய ரசனையை புரிந்துக் கொள்வீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கும்பம்**
பிரச்சினையின் ஆணி வேரை கண்டறிவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். வாகனத்தையும் சீர் செய்வீர்கள். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். எதிர்பார்த்த லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

# கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீட்டெடுக்க வேண்டும்!

## முதலமைச்சர் பிரதமரிடம் வலியுறுத்து



சென்னை, ஏப். 10

கச்சதீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்ச மு. க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருநாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார். இதன்போது, முதலமைச்சர் ஸ்டாலின் சில கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை கையளித்தார். அதிலேயே இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சர்வதேச கடல் எல்லை கோட்டை தாண்டிச் செல்லும் நிகழ்வுகளில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அவர்களின் பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் போது அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகளுடன் இலங்கை அரசால் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாக்கு வளைகுடா பகுதிகளில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்து அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

"சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம் 2-ஐ கட்டம் 1-ஐ செயல்படுத்தியதை போல் மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கான ஒப்புதலை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஐ)

# தமிழகத்தின் வளர்ச்சி இந்தியாவுக்கு அவசியம்!

## பிரதமர் நரேந்திர மோடி



சென்னை, ஏப். 10

தமிழகத்தின் வளர்ச்சி என்பது எங்களுக்கு மிகவும் முக்கியம் என்று தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு ரூ. 6 ஆயிரம் கோடியும், சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கு 6 மடங்கு அதாவது ரூ. 8,200 கோடி வரையும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழகம் வந்த மோடி பேசுகையில்,

தமிழகத்துக்கு வருவது எப்போதும் பெருமை தருவதாக உள்ளது. வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் தாய்வீடாகவும், மொழி, இலக்கியத்தின் விளைநிலமாகவும். தேசபக்தி மற்றும் தேசிய உணர்வின் மையமாகவும் தமிழகம் திகழ்கிறது. பல சுதந்திர போராட்ட வீரர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள்.

மத்திய வரவு - செலவு திட்ட கட்டமைப்புக்காக மட்டும் இந்த ஆண்டில் ரூ. 10 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2014-ல் ஒதுக்கியதை விட 5 மடங்கு அதிகமாகும். அதே போல, ரயில்வே கட்டமைப்புக்கும் இதுவரை இல்லாத சாதனை அளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை - கோவை வந்தே பாரத்ரயில், சிறு தொழில்களை வாடிக்கையாளர்களுடன் இணைக்கிறது. சென்னை விமான நிலைய புதியமுனையம் உலகத்தை தமிழகத்துக்கு கொண்டு வருகிறது. இது இளைஞர்களுக்கு வருவாய் வாய்ப்புகளை வழங்குகிறது. முதலீடுகளையும் அதிக அளவில் கொண்டு வருகிறது.

தமிழக வளர்ச்சி என்பது எங்களுக்கு மிகவும் முக்கியம். அதற்குமிகப்பெரிய முன்னுரிமை அளிக்கிறோம். தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு மட்டும் ரூ.6 ஆயிரம் கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2009-14ஆம் ஆண்டுகளில் இது ஆண்டுக்கு ரூ. 900 கோடிக்கும் குறைவாகவே இருந்தது.

கடந்த 2 ஆண்டுகளில் பல முக்கிய திட்டங்களை தமிழகம் கண்டுள்ளது. பாதுகாப்பு தொழில் வழித்தட திட்டம் பாதுகாப்பை அதிகரிப்பதுடன், வேலைவாய்ப்பையும் உருவாக்கியுள்ளது. பி.எம். மித்ரா மெகாஜவுளி பூங்கா திட்டம் தமிழக ஜவுளித் துறைக்கு மிகவும் சாதகமாக அமையும்.

கடந்த ஆண்டு, பெங்களூர் - சென்னை அதிவிரைவு சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மாமல்லபுரம் - கன்னியாகுமரி சாலை மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற வளர்ச்சியை முன்னெடுக்கும் பல திட்டங்கள் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று மேலும் சில திட்டங்கள் தொடங்கப்பட்டும், அடிக்கல் நாட்டப்பட்டும் உள்ளன.

குறிப்பாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று முக்கிய நகரங்கள் இந்த புதியதிட்டங்கள் மூலம் நேரடியாக பயன்பெறுகின்றன. சென்னை - கோவை வந்தே பாரத் ரயில், தமிழக இளைஞர்களிடம் பிரபலமடைந்துள்ளது. 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற கருத்து, வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பூமியில் இயல்பானதுதானே. இந்த நவீன இணைப்பு ஜவுளி, குறு, சிறு தொழில் முனையமான கோவையில் உற்பத்தி திறனை அதிகரிக்கும். சென்னையில் இருந்து 6 மணிநேரத்தில் கோவைக்கு வந்தே பாரத் ரயில் செல்லும், இதன்மூலம் ஜவுளி, தொழில் மையங்களான சேலம், ஈரோடு, திருப்பூருக்கும் பயன்தரும்.

தமிழகத்தின் கலாசார தலைநகராகவும், உலகின் மிக பழமையான நகரங்களில் ஒன்றாகவும் மதுரை விளங்குகிறது. தற்போதைய திட்டங்களால் மதுரை மாநகரம் பெரிதும் பயன்பெறும். தமிழகம் இன்று வளர்ச்சி இயந்திரங்களில் ஒன்றாக உள்ளது. கட்டமைப்பு, வேலைவாய்ப்பை உருவாக்கும்போது வருவாய் அதிகரித்து, தமிழகம் வளர்கிறது. தமிழகம் வளர்வதால், இந்தியாவும் வளர்கிறது - என்றார்.

(ஐ)

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கு தமிழ் கட்சிகள் இணக்கம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ அறிவிப்பு

## வடக்கு, கிழக்கு, தெற்கு பாதிக்கப்பட்டோர் ஏற்க மறுப்பு

கொழும்பு, ஏப். 10

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவது குறித்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி உள்ளதாகவும் அவர்கள் இந்தச் செயன்முறைக்கு இணங்கியிருப்பதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், வடக்கு -கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடங்கலான எந்தவோர் உள்ளகப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று அறிவித்திருக்கும் அதேவேளை, தெற்கில் உள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தால் சாதிக்க முடியாததை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் சாதிக்க முடியும் என்று தாம் நம்பவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற ஆயுத மோதலின்போது பதிவான மனித உரிமைகள் மீறல் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுத்து நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகம் இலங்கையை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் தென்னாபிரிக்காவில் நிறுவப்பட்டதை ஒத்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை இலங்கையில் நிறுவ நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

இதன்படி, இது குறித்து தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தாம் பேச்சுகளை முன்னெடுத்திருப்பதாகவும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ அவர்கள் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்ட நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அந்த ஆணைக்குழுவின் கீழ் நியமிக்கப்படும் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்துவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், இனிவரும் காலங்களில் தாம் எந்தவோர் உள்ளகப் பொறிமுறையையும் நம்பி ஏமாறுவதற்கும், காலத்தை வீணடிப்பதற்கும் தயாரில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சர்வதேச விசாரணை மாத்திரமே தமது தேவை என்றும், அங்கும் நீதி கிடைக்காவிட்டால் போராடி சாவோம் என்றும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை இதுபற்றி கருத்து வெளியிட்டிருக்கும் தெற்கில் உள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை தாம் எதிர்க்கவில்லை எனும் போதிலும், இதுவரை காலமும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் ஊடாக கிடைக்கப்பெறாத தீர்வு, இப் புதிய ஆணைக்குழுவின் ஊடாக கிடைத்துவிடும் என்று தாம் நம்பவில்லை என தெரிவித்துள்ளார். (ஐ)

# ஹெரோயினுடன் ஒருவர் பூநகரியில் நேற்று கைது!

கொழும்பு, ஏப். 10

213 கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பூநகரி - பள்ளிக்குடாவில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் பூநகரி பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பண்ணாகத்தில் வாள்வெட்டு இரண்டு சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 10

கார் ஒன்றில் பயணித்தவரை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வீதியில் வழிமறித்து வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். எனினும், இதில் இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்ணாகத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் 25 மற்றும் 30 வயதுடைய இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் ஜி. எஸ். பி. சலுகையை நாடு இழக்கும்!

## சுமந்திரன் எம். பி. எச்சரிக்கிறார்

வடமராட்சி, ஏப். 10

சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதியைமீறி புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டுவர முயற்சித்தால் ஜி. எஸ். பி. வரிச் சலுகை இல்லாமல் போகுமென்ற அச்சம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,

ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டு வரப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

வடமராட்சியில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும், பெரும்பொருளாதாரச் சிக்கல் ஒன்று இந்த நாட்டை பீடித்திருக்கின்றது. அதிலிருந்து இந்த நாட்டை மீட்க போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார். அவ்வாறு நாடு மீண்டதாக ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால், மிக விரைவிலே நாடு மிக மோசமான பொருளாதார சூழ்நிலைக்கு செல்ல இருக்கிறது. அப்படியான சந்தர்ப்பத்தில் திரும்பவும் மக்கள் போராட்டங்கள் வெடிக்கக் கூடும் என்ற காரணத்தால் அதை கட்டுப்படுத்துவற்கு இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனர்.

ஏனெனில், கடந்த காலங்களைப் போன்று மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஏற்படுகிறபோது அதனைக் கட்டுப்படுத்த அல்லது ஒடுக்குவதற்கு தற்போது ஜனாதிபதியின் கையில் இருக்கின்ற சட்டங்கள் போதாது என்று அவர் கருதுகின்றார்.

இதேபோன்று, பயங்கரவாத தடை சட்டங்களை பிரயோகித்தால் சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை மீறுவதாக அமையும் என்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தால் கொடுக்கப்படுகின்ற ஜி. எஸ். பி வரிச் சலுகைகூட இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படும்.

ஆகவே புதியதொரு நல்ல விடயத்தை தாங்கள் செய்வது போல மிக மிக மோசமான ஒரு செயலையே செய்வதற்கு முனைகின்றனர். குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக காட்டிக் கொண்டு அதனை விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமென்ற இந்தச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதாவது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகிறேன் என்று ஒரு மாயத் தோற்றத்தை காட்டிக் கொண்டும் சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய சட்டத்தையே கொண்டு வருகிறேன் என்பதற்காகவே இந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

இந்த சட்டம் கொண்டு வரப்படுவதற்கான உண்மையான நோக்கம் என்னவெனில் மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக அல்லது அரசாங்கத்திற்கு எதிராகவோ தமது எதிர்ப்பை காண்பிக்கின்ற போது அதனை இரும்பு கரம் கொண்டு அடக்குவதற்கான ஒரு கருவியாகத்தான் அல்லது முன்னெச்சரிக்கையாகத் தான் முன்கூட்டியே இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முனைந்திருக்கின்றது - என்றார். (ஐ-02)

# விக்கிரகங்களை வைக்கக்கூடாது என்கிறவர் உடைப்பதற்கு அனுமதி கொடுத்தது எப்படி?

## சிறீதரன் எம். பி. கேள்வி

கிளிநொச்சி, ஏப். 10

விக்கிரகங்களை யாரும் வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே உள்ள விக்கிரகங்களை உடைப்பதற்கு எவ்வாறு அனுமதி கொடுத்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முரசுமோட்டை வட்டார கிளையின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் நடந்தது. இதில் கருத்துவெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் ஜனாதிபதி சொல்கின்றார் யாரும் விக்கிரகங்களை வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று. இவ்வாறு கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே பாரம்பரியமாக வழிபட்டு வந்த விக்கிரகங்களை உடைப்பதற்கான அனுமதியை கொடுக்கின்றார். குறிப்பாக குருந்தூர் மலையிலே நீதிமன்றம் போட்ட கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது.

வெடுக்குநாறி மலையிலே விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன இவ்வாறு தமிழர் வழிபாட்டிடங்களில் விகாரை அமைப்பதற்கு அவர் அனுமதித்துள்ளார். சிங்கள - பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் அவர் மௌனமாக இருப்பார். ஆனால், தமிழர்கள் எதையும் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு செய்தால் அது வலுக்கட்டாயம் என்றும் தடுத்து வருகின்றனர்

இவ்வாறான ஒரு நெருக்கடிக்குள்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் எங்களுக்கான சுயாட்சியை நிறுவுவதற்காக நீண்ட - நெடுங்காலமாக போராடி வருகின்றோம். அதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை விலையாக கொடுத்திருக்கின்றோம்.

பலரை இழந்திருக்கின்றோம். பெறுமதி மதிப்பட முடியாத சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இதையெல்லாம் கடந்தும் இந்த மண்ணில் எமக்கான விடுதலை நோக்கிய பயணத்தில் ஒன்றுசேர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# கஞ்சா விற்பனை செய்த பெண் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 10

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவக்கிரி பகுதியில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து ஒரு கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து கஞ்சாவை விற்பனை செய்த 28 வயது பெண்ணொருவர் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து 157 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள் ளார்.

இந்தக் கைது நடவடிக்கை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். இது குறித்து மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு!

## சேர்ந்து இயங்கமுடியாது என்று ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஏப். 10

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி ரோஹிணி மாரசிங்கவுடன் இணைந்து செயல்பட முடியாது என ஆணைக்குழு வின் மூன்று உறுப்பினர்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.**

உறுப்பினர்களான கலாநிதி விஜித நாணயக்கார, கலாநிதி நிமல் கருணாசிறி மற்றும் களுபான பியரத்ன தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்துக்கு முரணாக செயல்படுகிறார் என்றும் ஆணைக்குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்காமல் தனது தனிப்பட்ட விருப்பத்துக்கு அமைய செயல்படுகிறார் என்றும் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தலைவர் தொடர்ந்து புறக்கணித்ததால், கடந்த பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவின் முன்மொழிவுகளுக்கு உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பேச்சை தலைவர் கேட்காததால், இந்த மூன்று உறுப்பினர்களும் அவரது எந்த முடிவையும் அங்கீகரிக்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளனர். ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உயர் பதவியை எதிர்பார்த்தே அவர் இவ்வாறு நடந்து கொள்வதாகவும் குறிப்பிடுகின்றனர். எனவே, இது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துமாறு இந்த உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தலைவர் உட்பட 5 பேர் அங்கம் வகிக்கின்றனர். அவர்களில் மூவர் தமது கையொப்பத்துடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை, மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் அரசின் முடிவுகளை எதிர்த்த இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராகவும் இதே போன்ற நிலைமை உருவாகியிருந்தது. போராட்டங்களை ஒடுக்கும் அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராகவும் எதிர்ப்பு கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் வீதியில் விழுந்த பெண் பின்னால் வந்த லொறி ஏறி மரணம்

சிலாபம், ஏப். 10

பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் ரயர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் வீதியில் விழுந்த பெண்ணை லொறி ஏறியதில் அவர் நசியுண்டு உயிரிழந்தார். அவரின் கணவரும் இரு பிள்ளைகளும் இதில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புத்தளம் - சிலாபம் - அலவத்தைப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாயான 40 வயது பெண்ணே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, உயிரிழந்த பெண் கணவர் மற்றும் இரு பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். கணவர் மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டிருந்தார். அந்தச் சமயம் மோட்டார் சைக்கிளின் பின்புற ரயர் திடீரென வெடித்து விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தூக்கி வீசப்பட்டனர். நடுவீதியில் விழுந்த பெண்ணை பின்னால் வந்த லொறி ஏறியதில் அவர் நசியுண்டு மரணமானார். இந்த விபத்தில் காயமடைந்த கணவர், இரு பிள்ளைகள் சிலாபம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# போதை வலையமைப்புடன் தொடர்பு; கான்ஸ்டபிள் உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஏப்.10

ஹரக்கட்டாவின் போதைப் பொருள் வலையமைப்புடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுக்கு உட்பட்ட மிரிஹான பிரிவில் கடமையாற்றி வருகிறார்.

கான்ஸ்டபிளுடன் கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேக நபரிடமிருந்து 74 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கார் ஒன்றும் இரண்டு கைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# இலங்கையர்க்கு ஜப்பானில் அதிக தொழில் வாய்ப்புகள்!

கொழும்பு, ஏப். 10

ஜப்பானில் இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி நிலையங்களை நிறுவுதல் மற்றும் இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் ஈட்டக்கூடிய அதிக தொழில்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்துடன் இரு தரப்பு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, அந்நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரிகள் மற்றும் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்தபோதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

தாதியர் துறையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நாட்களின் எண்ணிக்கை மற்றும் மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அதிகமான தொழிலாளர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, தொழில் தேடுபவர்களுக்கு அந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பை வழங்க ஜப்பானிய தொழிலாளர் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

# விதிமீறிய எரிபொருள் நிலையங்களுக்கு 12 முதல் மீண்டும் பெற்றோல் விநியோகம்!

கொழும்பு, ஏப். 10

கியூ. ஆர். கோட்டா விதிமுறையை மீறி எரிபொருள் விற்பனை செய்தமைக்காக தடை செய்யப்பட்ட 40 "சிபெற்கோ" எரிபொருள் நிலையங்களுக்கும் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு ஒரு வாரத்துக்கு மாத்திரமே தடைவிதிக்கப்பட்டதாக தெரிவித்த அந்த அதிகாரி, எதிர்வரும் 11ஆம் திகதியன்று ஒரு வாரம் நிறைவடைகிறது என்றும், 12ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இந்திய நிறுவன மருந்துகளின் பாவனை உடனடியாக நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 10

சத்திர சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மயக்க மருந்தின் பாவனையை சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக விலக்கியுள்ளது.

இதன்படி, மூன்று வகை மருந்துகளின் பயன்பாடு தற்காலிகமாக மீளப்பெறப்பட்டுள்ளன. இந்த மருந்து இந்திய கடன் வரியின் கீழ், இந்திய மருந்து நிறுவனத்தால் இலங்கைக்கு விநியோகிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இலங்கைக்குள் மருந்தின் தரத்தை பரிசோதிக்க முடியாது என்ற உண்மையின் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மற்ற நாடுகளில் அதன் செயல்திறன் மற்றும் இந்தியா வழங்கிய தொடர்புடைய சான்றிதழ்களின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாணவர்களுக்கான சீருடையில் 80 வீதம் விநியோகிக்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 10

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் தேவையில் 80 வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 20வீதம் இந்த மாத இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக சீனாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்த 70வீத சீருடைத் துணிகள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டத்தில், மீதமுள்ள 5 மாகாணங்களுக்கு 30வீத சீருடை துணிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

41 இலட்சம் பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவர் பிக்குகளுக்கு சீருடைகள் விநியோகிக்கப்பட உள்ளன.

# இலங்கை பொருளாதார மீட்சி பெற சகலரும் ஒன்றிணைய வேண்டும்!

## ஐ. எம். எவ்வின் இலங்கைக்கான தூதுவர்

கொழும்பு, ஏப். 10

இலங்கை எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து நிலையான மீட்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி பீற்றர் புரூவர் தெரிவித்துள்ளார்.

யூ-ரியூப் காணொலி மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீட்சி மற்றும் ஸ்திரதன்மைக்கு ஊக்குவித்தல் ஆகியவை குறித்து அந்தக் காணொலியில் கருத்துரைத்துள்ள அவர், அதிகரித்த பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொள்கை தவறுகளுக்கு பின்னர் இலங்கை மீளகட்டியெழுப்புவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் உதவுவதற்கே இங்கு வந்துள்ளது.



இலங்கைக்கு மிகவும் தேவையான தருணத்தில் அடுத்த நான்கு வருடங்களுக்கு 300 கோடி அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் முன்வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2019 முதல் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அளவு வரி விலக்களிப்பும் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்களில் காணப்பட்ட தாமதங்களும் இலங்கை அதிகளவு கடன் குறைந்தளவு அந்நிய செலாவணி கையிருப்புடன் கொரோனா பெருந்தொற்று காலத்திற்குள் நுழைய வேண்டிய நிலையை ஏற்படுத்தியது என தெரிவித்துள்ள பீட்டர் புரூவர் அந்நியசெலாவணி கையிருப்பில் இல்லாததால் மின் துண்டிப்பு, உணவு - மருந்து -அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றுக்கான தட்டுப்பாடு உருவானது. நீண்ட எரிபொருள் வரிசைகள் உருவாகின எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தனது வரலாற்றில் முதல் தடவையாக தனது கடனை திருப்பி செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது. இதற்கான சுலபமான தீர்வுகள் இல்லை. இந்த பெரும் பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதே வேளை நலிவடைந்த நிலையில் உள்ள மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மாகாண சபைகளின் 207 வாகனங்கள் தற்போது யாரிடம் என்றே தெரியாதாம்

## கணக்காய்வு கோர எம்.பிக்கள் குழு முடிவு

கொழும்பு, ஏப். 10

**மாகாண சபைகளின் அரசியல் அதிகார சபைக்கு சொந்தமான 207 சொகுசு வாகனங்களை தற்போது யார் பயன்படுத்துகிறார்கள்? என்பது தொடர்பில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இல்லை என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இது தொடர்பில் கணக்காய்வு கோருவதற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

தகவல் அறியும் சட்டத்தின் கீழ், உரிய சொகுசு வாகனங்களை யார் பயன்படுத்துகிறார்கள், என்னென்ன கடமைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது தொடர்பான தகவல்களை கோருவதற்கு எம். பிக்கள் குழு தயாராகி வருகிறது.

குறிப்பாக குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் மருத்துவமனை பணிப்பாளர்களுக்கு வாகனங்கள் இல்லாத சூழ்நிலையில் இந்த விடயம் பாரதூரமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அரசாங்கத்துக்கு புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை என்பதுடன் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வாகனங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதேவேளை மாகாண சபைகள் கலைக்கப்பட்ட போது அது தொடர்பான வாகனங்களுக்கு என்ன ஆனது என்பது தீவிர விவாதத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஒரு மாகாண சபையின் முதலமைச்சருக்கு நான்கு வாகனங்களும், அவைத்தலைவருக்கு மூன்று வாகனங்களும், நான்கு மாகாண அமைச்சர்களுக்கு தலா இரண்டு வாகனங்களும், எதிர்க்கட்சித் தலைவருக்கு தலா ஒரு வாகனமும் வழங்கப்படும் . இதன்படி, ஒன்பது மாகாண சபைகளுக்கும் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 207 ஆக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டை உறுதிப்படுத்தும் கொள்கை ரணில், சஜித், பஸிலிடம் இல்லை!

## இப்படி சொல்கிறது ஜே. வி. பி.



கொழும்பு, ஏப். 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்தே ஆட்சியமைக்கவுள்ளனர். நாட்டுக்கு தற்போது தேவையாக உள்ள ஸ்திரமான அரசியல் கொள்கை இவர்களிடம் இல்லை. மாறாக, ஒருவரையொருவர் பாதுகாப்பதே இவர்களின் நோக்கமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கட்சித் தாவல்களால் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. நாட்டில் அரசியல் வரலாற்றில் இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ராஜித சேனாரத்ன மற்றும் மகிந்த அமரவீர உள்ளிட்டோர் வாழ்நாளில் அதிக நாட்களில் அமைச்சர்களாக பதவி வகித்தவர்களாவர். எனவே, அவ்வாறானவர்களால் அமைச்சுப் பதவியின்றி இருக்க முடியாது. இவர்கள் கட்சி தாவுவதால் எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்தே ஆட்சியமைக்கவுள்ளனர்.

தமது பாராளுமன்ற உறுப்பினர்களை 20 கோடி ரூபாய்க்கு பேரம் பேச அரசாங்கம் தயாராகியுள்ளது என்பதை கூறுவதற்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் சஜித் பிரேமதாஸ வெட்கமடைய வேண்டும்.

கட்சித் தலைமைத்துவம் குறித்த பிரச்னையையே இது காண்பிக்கிறது. தற்போது இந்நாட்டுக்கு ஸ்திரமான அரசியல் கொள்கைகள் அவசியமாகும். அவ்வாறான ஸ்திரமான கொள்கை அரசாங்கத்திடம் இல்லை. மாறாக, அரச சொத்துகளை கொள்ளையிட்டவர்களை பாதுகாப்பதையும், தொடர்ந்தும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்குமே இவர்கள் கூட்டாக செயல்பட்டுக்கொண் டிருக்கின்றனர் - என்றார். (ஐ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை ஆளும் கட்சியினரும் எதிர்க்கின்றனர்!

## சிறீ லங்கா சுதந்திரக் கட்சி



கொழும்பு, ஏப். 10

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மோசமானது. இதனை எதிர்க்கும் ஜனநாயகத்தை மதிக்கும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு, சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை தோல்வியடைச் செய்வோம் என சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சுதந்திர கட்சியின் நிலைப்பாடு குறித்து வினவியபோது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். 1979இல் தயாரிக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை விட மோசமானதாக இந்த சட்டமூலம் காணப்படுகிறது.

இதன் ஊடாக ஊடகங்கள் மற்றும் எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையும் முடக்கும் அதிகாரம், எந்தவொரு நபரையும் கைதுசெய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் ஜனாதிபதிக்கு காணப்பட்ட அதிகாரம் சகல சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரஜைகளை துன்புறுத்தக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் சகல மாவட்டங்களிலும் 90 நாட்கள் தடுத்து வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரிக்கும். எனவே, இதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். சர்வாதிகார ஆட்சியை நாட்டில் ஏற்படுத்தவே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளோம். இவ்வாறு எழுந்துள்ள எதிர்ப்புக்களின் காரணமாகவே அரசாங்கம் ஓர் அடியைப் பின்வைத்துள்ளது.

அரசாங்கத்திலும் இந்த சட்டமூலத்தினை எதிர்க்கும் சிலர் உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இதனை பாராளுமன்றத்தில் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

அரசாங்கத்துடன் இணைவதற்கு சுதந்திர கட்சிக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்படுமானால், அதற்கு எமது ஆதரவை வழங்கத் தயார். இதனை சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே தெரிவித்துள்ளார். மாறாக, ஒவ்வொருவரும் தத்தமது விருப்பத்துக்குச் சென்று அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பதை அனுமதிக்க முடியாது - என்றார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கோட்டாபயவால் பரிந்துரை?



கொழும்பு, ஏப். 10

ஜனாதிபதி தேர்தலில் அடுத்து யாரை நிறுத்துவது என்பது தொடர்பாக கோட்டாபய ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக பெரும்பங்கு ஆற்றியவர் என்று கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர் என்றும் அதனை மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

ஜனாதிபதி தேர்தல் பற்றி பேசுவதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்றும் குறித்த நபரை பொதுஜன பெரமுன வேட்பாளராக குறிப்பிட முடியாது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# டொலரை ரூபாயாக மாற்ற வேண்டும் என்ற விதி நீக்கம்!

கொழும்பு, ஏப். 10

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், ஏற்றுமதி வருமானம் பெறுபவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை டொலர்களை இலங்கை ரூபாயாக மாற்ற வேண்டும் என மத்திய வங்கி விதித்த சட்டத்தை இம்மாதம் முதல் இடைநிறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமிருந்து தற்போது பெறப்படும் வருமானத்தின் அளவு காரணமாக ஏற்றுமதி வருமானத்தின் ஒரு பகுதியை இலங்கை ரூபாயாக மாற்ற வேண்டிய அவசியமில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அனுப்பும் பணம், ஏற்றுமதி வருமானம் மற்றும் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் அமெரிக்க டொலர்களின் தொகை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

# நாளாந்தம் 932 தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் சூழலுடன் சேர்கின்றன

கொழும்பு, ஏப். 10

நாட்டில் நாளாந்தம் 932.4 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் சூழலுடன் கலக்கின்றன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில், 300.30 மெற்றிக்தொன் பிளாஸ்ரிக் சேகரிக்கப்படுகின்றன. 632.12 பிளாஸ்ரிக் கழிவுகள் சூழலில் விடப்படுகின்றன.

இவ்வாறு சூழலில் வீசப்படுகின்ற 419.47 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக், எரிக்கப்படும் நிலையில், 38.48 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. மீள்சுழற்சி செய்யும் பிரதான நிறுவனங்களுக்கு உரிய முறையில் குறித்த கழிவுப் பொருட்கள் சென்றடையவில்லை என சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுச் சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, மீள்சுழற்சி செய்முறைகளை வலுப்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, குளிர்பானம் அருந்த ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்ரிக் ஸ்ரோ உள்ளிட்ட பொருட்கள் சிலவற்றிற்கு இறக்குமதி தடை விதிக்கப்படவுள்ளது.

இந்த தடை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியிலிருந்து அமுலாகவுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கையொப்பத்துடன் வெளியானதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயங்கரவாதத்துக்கெதிரான புதிய சட்டமூல வரைவு: ஆரம்ப அவதானிப்புகள்!



எர்மிஸா டேகல்

யுத்தத்தின் கோரப்பிடியிலிலிருந்து விடுபட்டுள்ள இலங்கை போன்ற நாடானது தனது பிரஜைகளை ஓரங்கட்டி அவர்கள் மீது பரந்தளவில் திணிக்கப்பட்டுள்ள கடுமையான சட்டங்களை அகற்றியிருக்க வேண்டும். இருந்தும், உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையில் தொடர்ந்து வரும் அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களால் 40 வருடங்களாக பிரஜைகளின் மீது குறிப்பாக சிறுபான்மை மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள 1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத்துக்கெதிரான சட்டத்தின் (பிரிஏ) அடுத்த முயற்சியாக கடந்த மார்ச் 17ஆம் திகதி புதிய பயங்கரவாதத்துக்கெதிரான சட்டக்கோவை (ஏரிஏ) முன்மொழியப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தில் சிவில் சமூகம், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சிறுபான்மை உட்பட ஏனையோரின் சட்டபூர்வமான, அமைதியான செயற்பாடுகளையும் அரசாங்கத்துக்கெதிரான மாற்றுக்கருத்துகளையும் ஒடுக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரம் பாவிக்கப்பட இருப்பதை அரசாங்கம் இந்த சட்டம் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. வழங்கப்பட்டுள்ள பரந்த அதிகாரத்துக்கான எவ்வித நியாயப்பாடுகளும் இல்லை. வழமையைப்போல இம்முறையும் முன்மொழியப்பட்டுள்ள சட்டமூல வரைவில் இருக்கும் ஏற்பாடுகளுக்கான சூழமைவும் நோக்கமும் குறிப்பிடப்படவில்லை. அந்த சட்டத்தின் முன்னுரையின் படி, நாட்டின் பொருளாதாரமானது பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பதனால் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு கட்டுப்படுவதோடு உலகின் ஏனைய இறைமையுள்ள நாடுகளையும் பாதுகாப்பதற்கான உறுதியையும் அளிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட எந்த நோக்கங்களும் அந்த சடத்தின் ஏற்பாடுகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வகையான குற்றங்களுக்குமான சட்டங்கள் பரந்தளவில் குறிப்பிடப்பட்டிருப்பினும் உண்மையில் இம்முன்மொழிவானது அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் பிரஜைகளுக்கெதிரான பிரேரணையாகவே கொள்ளப்படவேண்டும்.

### பொதுமக்களின் எழுச்சியின் போது முடுக்கிவிடப்பட்டுள்ள ஏரிஏ

இலங்கையானது பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இந்நேரத்தில் அரசாங்கம் கொண்டுவந்துள்ள கொள்கைகள் மக்களின் மீது பலத்த அடியாக விழும் நேரத்தில் ஏரிஏ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடித்தட்டு மக்கள் மட்டுமல்லாது மத்தியதர மக்களின் மீதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து மக்கள் வீதிகளில் இறங்கியிருப்பது வாடிக்கையாயுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை குறிவைத்தே அந்த சட்டம் வரையப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியிலும் உயர்தட்டு மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காக, போராட்டக்காரர்கள் 'தீவிரவாதிகளாக' காட்டப்பட்டுள்ளார்கள். இதன்மூலம் தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூல வரைபானது 'ஜனநாயகத்துக்கெதிரான சட்டமூலமாக' கொள்ளப்படவேண்டும்.

முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமானது பயங்கரவாதம் என்ற குடையின் கீழ் பரந்தளவிலான குற்றங்களை உள்ளடக்கியுள்ளது.

அசாதாரணமான கைது மற்றும் தடுத்துவைத்தலை தொடர்ந்தும் நிலைநிறுத்தியுள்ளதோடு விரிவுபடுத்தியுமுள்ளது.

பொலிஸாருக்கு விசாரணை மேற்கொள்ளும் அதிகாரத்தை விரிவுபடுத்தியுள்ளது.

குற்றத்தை ஒப்புக்கொள்ள வைக்கும் அதிகாரத்தை சட்டமா அதிபருக்கு விரிவாக்கியுள்ளது.

அமைப்புகளை தடைசெய்தல், ஊரடங்கை அமுல்படுத்தல், தடுக்கப்பட்ட பிரதேசங்களை (உயர்பாதுகாப்பு வலயங்களை போல) பிரகடனப்படுத்தல், புனர்வாழ்வு மையங்களை நிறுவுதல் போன்ற விடயங்களில் ஜனாதிபதிக்கு பரந்தளவிலான அதிகாரங்கள் வழங்கியுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்ட விதிகளை சுருக்கமாகப் பார்த்தால், அது முன்னைய சட்டத்தைவிட மோசமானது என்பது நிரூபணமாகிறது. முன்னையதில் காணப்பட்ட 'ஒப்புதல் பிரிவு' நீக்கப்பட்டுள்ளதோடு கைதுகள் மீதான நீதித்துறை மேற்பார்வை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், கைதுகள் மீதான நீதித்துறை மேற்பார்வையை ஈடுசெய்ய தடுப்பு உத்தரவுகளின் அதிகாரம் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு அறிமுகப்படுத்தப்பட்ட நீதித்துறை மேற்பார்வை பொருளற்றதாக மாறுகின்றது.

### பயங்கரவாதக் குற்றம் என்பதன் வரையறையை விரிவுபடுத்துகிறது

குற்றங்களுக்கெதிரான சாதாரண பாதுகாப்புகளை நீக்கும் ஒரு சட்டமானது ஒரு குற்றம் நிகழும் சூழ்நிலைகள் மற்றும் அவற்றை குற்றங்களாக நோக்கக்கூடிய சந்தர்ப்பங்களை துல்லியமாக வழங்கி இருக்கவேண்டும். இது அவ்வாறான சட்டங்கள் முறையற்ற மற்றும் நியாயமற்ற வழிகளில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை குறைக்கும். அதனால்தான் பயங்கரவாதம் என்ற வரையறை தெளிவாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் இந்த புதிய சட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரிவு 3(2)இல் பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பது, தனியார் சொத்துகளைத் திருடுவது மற்றும் சட்டவரைவில் பரந்தளவில் குரிப்பிடப்பட்டுள்ள ஏனைய பயங்கரவாத குற்றச்செயல்களை மேற்கொள்ள இணையும் கூட்டங்களில் அங்கத்தவராக இருப்பது என 13 வகையான பயங்கரவாத குற்றச்செயல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி, பயங்கரவாத நிகழ்வுகள் என அரசாங்கம் கருதுவது,

குடிநீர் மாசுபடுதலில் அரசின் தலையீட்டுக்கெதிராக மக்களால் மேற்கொள்ளப்பட்ட ரத்துபஸ்வல ஆர்ப்பாட்டம், எரிபொருள் விநியோகம் தொடர்பில் ரம்புக்கனையில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை, மீதொட்டமுல்ல குடியிருப்பு பகுதியில் குப்பைகளை கொட்டும் அரச தீர்மானம், ஹம்பாந்தோட்டை கைத்தொழில் அபிவிருத்தி வலயங்கள் போன்ற திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பேரில் நகர்ப்புற மக்கள் வெளியேற்றம், பெருந்தோட்ட அபிவிருத்திக்காக நடைபெறும் நில அபகரிப்பு மற்றும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி பொதுமக்கள் மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள் தொழிற்சங்க வேலை நிறுத்தம்.

வெகுஜன குடிமைப் போராட்டங்கள் மற்றும் கீழ்ப்படியாமை நடவடிக்கைகள் (2018இல் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான போராட்டம் மற்றும் 2022 இன் கோட்டா கொகம)

தேசிய நலனுக்குத் தீங்கானதாகக் கருதப்படும் விமர்சனம் (திஸ்ஸநாயகம் போன்றோரின் கைதுகள் மற்றும் வழக்குகள் போன்றவை (இன வெறுப்பை தூண்டும் வெளியீடுகள் மூலம் பணம் வசூலித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட திஸ்ஸநாயகம்), அசாத் சாலி (பொதுபல சேனா மீதான அவரது விமர்சனங்கள் இன ஒற்றுமையின்மைக்கு தூண்டுதலாகக் கூறப்பட்டது).

மனித உரிமை ஆர்வலர்கள் (ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்த போது இடம்பெற்ற கைது மற்றும் தடுத்துவைப்பு போன்றவை)

பிரிவு 3(2) வரையறையானது சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளை முற்றிலும் மீறுகிறது. வரைவிலக்கணமானது குற்றங்களின் நீண்ட பட்டியலைக் கொண்டுள்ளது. இந்த குற்றங்களில் பல, சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களாக இருக்க வேண்டும். இருப்பினும், அவற்றை 'பயங்கரவாத குற்றங்கள்' என்று மறுவடிவமைப்பது அடிப்படையில் நாட்டிற்கு அச்சுறுத்தலாகும்.

இதில் உள்ள வரைவிலக்கணம் ஐநா நெறிமுறைகளை மீறுகிறது.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பயங்கரவாதத்தை வரையறுக்கும் முயற்சிகள் பின்வரும் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்:

அ. வரையறுக்கப்பட்ட குற்றங்கள் (பயங்கரவாதத்திற்கு எதிராக வரையப்பட்ட 10 சர்வதேச உடன்படிக்கைகளில் காணப்படும் 'தூண்டுதல் குற்றங்கள்' என விவரிக்கப்பட்டுள்ளவை) மற்றும்

பகுதி 1 நோக்கம் - கொலை, கடுமையான உடல் காயங்களை ஏற்படுத்தல், அல்லது பணயக்கைதிகளாக வைத்திருத்தல்.

பகுதி 2 நோக்கம் - பயங்கரவாத நிலையைத் தூண்டுதல் - மக்களை மிரட்டுதல் - அரசு அல்லது சர்வதேச அமைப்பைச் செய்ய அல்லது தவிர்க்கும்படி கட்டாயப்படுத்துதல்.

பயங்கரவாதம் எனும் குற்றத்தை உறுதிசெய்ய நோக்கத்தின் இரு பகுதிகளும் இருக்க வேண்டும்.

சர்வதேச விதிமுறைகளின்படி, குற்றங்களை சுருக்கமாக வரையறுப்பதில் இந்த புதிய சட்டம் தோல்வியடைந்துள்ளது. மேலும் பயங்கரவாதத்துக்கெதிராக வரையப்பட்ட 10 சாசனங்களையும் கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளது. கீழ்வரும் நிலைகளில் மாத்திரமே பயங்கரவாத குற்றங்கள் நிகழ முடியுமென்ற சர்வதேச உடன்படிக்கைகளின் நிலைப்பாடுகளை அது பூர்த்திசெய்ய தவறியுள்ளது.

பிரிவு 10ன் படி (அ) பயங்கரவாதம் என்ற தவறைப் பொதுமக்கள் புரிவதற்கு, ஆயத்தஞ் செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்கு அவர்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிப்பதற்கு அல்லது தூண்டுவதற்குப் பொதுமக்களுள் சிலரினால் அல்லது எல்லோரினாலும் விளங்கிக்கொள்ளக் கூடிய சாத்தியங்கொண்ட கூற்றொன்றை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது ஏதேனும் சொல்லை அல்லது சொற்களைப் பேசுகின்ற, எவையேனும் சைகைகளை அல்லது புலப்படத்தக்க குறிப்பீடுகளைச் செயகின்ற, அல்லது (ஆ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்குப் பொதுமக்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு உட்கருதுகின்ற செயல்கள் பயங்கரவாத செயல்களாக கொள்ளத்தக்கன. இதன்படி பார்க்கும் போது சாதாரண குற்றங்கள் கூட பயங்கரவாத குற்றங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வரைபின் படி யாரொருவர் ஏதேனுமொரு விடயத்தை வெளியிடும் போது அதனை 'பயங்கரவாதம்' என்ற தவறைப் புரிவதற்கு அல்லது ஆயத்தஞ்செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்கான செயல் என பொருள்கோடல் செய்வது கடினமான காரியமாக இராது.

பிரிவு 11இன் படி ஒரு பயஙகரவாத வெளியீட்டை விநியோகித்தல், சுற்றி வழங்குதல், கொடுத்தல், விற்பனை செய்தல், கடனாகக் கொடுத்தல், விற்பனைக்காக முனைதல், பெற்றுக்கொள்ளல், வாசித்தல் அல்லது பார்த்தல், ஒரு கொடை அல்லது விற்பனை மூலம் அதனைப் பெறுவதற்கு அவர்களை இயலச்செய்யும் சேவையொன்றை ஏனையோருக்கு வழங்குதல் அல்லது ஒரு பயங்கரவாத வெளியீட்டின் உள்ளீடுகளை இலத்திரனியல் முறையில் கடத்துதல் போன்றவை பயங்கரவாத செயல்களாகும். பயங்கரவாதம் என்பது 'பயங்கரவாத வெளியீடு' என்பதாக பொருள்கோடல் செய்யப்படும் போது அதன் அர்த்தம் மேலும் விரிவாக்கப்படுகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள வரைபின் 12ஆம் பிரிவின் படி 'பயங்கரவாதம்' குறித்த அறிவுறுத்தல்களை பெறுதல், வழங்குதல் அல்லது பயிற்சிபெறுவதும் பயங்கரவாத குற்றமாகும். இதன்படி, ஆர்ப்பாட்டங்களை எங்கு, எப்படி நடத்துவது, என்ன பதாகைகளை ஏந்துவது போன்ற அறிவுரைகளை பெறுவதும் வழங்குவதும் கூட இதன் மூலம் அர்த்தம் கொள்ளப்படும் அபாயம் இருக்கின்றது. முன்மொழியப்பட்டுள்ள தண்டனையானது 15 வருட கடுங்காவல் சிறைதண்டனையும் 10 லட்ச ரூபா தண்டப்பணமுமாகும்.

16ஆம் பிரிவின்படி இச்சட்டத்தின் நியதிகளின்படி விடுக்கப்பட்ட ஒரு சட்டமுறையான பணிப்புரை அல்லது கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுகின்றவரும் அல்லது அதனை மீறிச் செயலாற்றுகின்றவரும் அல்லது இணங்கியொழுகுவதற்கு வேண்டுமென்று தவறுகின்றவரும் அல்லது அசட்டை செய்கின்றவரும் கூட குற்றவாளிகளாகக் கருதப்படுவர். 16ஆம் பிரிவு, 61ஆம் பிரிவோடு இணைத்து வாசிக்கத்தக்கதாக இருக்கிறது. பிரிவு 61ஆனது இச்சட்டத்தின்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறிப்பிடுகின்றது. அவையாவன: (அ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசிக்காதிருத்தல்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றை அல்லது வளவுகளை விட்டுச்செல்லல்

(இ) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றை அல்லது வளவுகளை விட்டுச்செல்லாது அத்தகைய இடப்பரப்பினுள் அல்லது வளவுகளினுள் தொடர்ந்திருத்தல்

(ஈ) ஏதேனும் வீதியில் பிரயாணஞ்செய்யாதிருத்தல்

(உ) எதனையும் இடம்பெயர்க்காதிருத்தல் அல்லது எவருக்கும் போக்குவரத்தை வழங்காதிருத்தல்

(ஊ) குறித்துரைக்கப்பட்ட பொதுப்போக்குவரத்து முறைமையொன்றின் தொழிற்பாட்டை இடைநிறுத்துதல்

(எ) ஏதேனும் அமைவிடத்திலிருந்து குறித்தவொரு புறப்பொருளை, வாகனத்தை, கலத்தை அல்லது வானூர்தியை நீக்குதல்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவின் நெருக்கத்தால் ஆத்திரம்:
## தாய்வானை சுற்றி வளைக்கும் ஒத்திகையை நடத்தும் சீனா

தாய்வான் அரசாங்கத்தைக் கடுமையாக எச்சரிக்கும் விதமாக, தாய்வானை சுற்றி வளைக்கும் மூன்று நாள் ஒத்திகையை சீன ராணுவம் தொடங்கியுள்ளது.

சீனாவின் எதிர்ப்பையும் மீறி தாய்வான் அதிபர் சாய் இங் வென் அமெரிக்காவுக்கு பயணித்ததும் அந்தப் பயணத்தின்போது அந்நாட்டு சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியை சந்தித்ததும் சீனாவை ஆத்திரமடையச் செய்துள்ளது.

இந்தச் சந்திப்பால் கோபமடைந்த சீனா, தாய்வான் அதிபர் சாய் இங்-வென் அமெரிக்காவுக்குப் பயணம் செய்து திரும்பிய சில மணி நேரங்களிலேயே எல்லையில் போர் ஒத்திகைகளைத் தொடங்கியுள்ளது.

தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம், 42 சீன ராணுவ விமானங்கள் மற்றும் 8 கப்பல்கள் தாய்வான் ஜலசந்தி இடைநிலைக் கோட்டைக் கடந்ததாகத் தெரிவித்தது.

இந்தக் கோடு சீனா மற்றும் தாய்வான் பிரதேசங்களுக்கு இடையேயான அதிகாரப்பூர்வமற்ற பிளவுக்கோடு.

இந்த ராணுவப் பயிற்சிகள் 'தாய்வான் தீவைச் சுற்றி ரோந்து மற்றும் முன்னேற்றங்களை ஒரே நேரத்தில் ஒழுங்கமைக்கும், சுற்றிவளைப்பு மற்றும் தடுப்புத் தோரணையை வடிவமைக்கும்" என்று சீன அரசு ஊடகம் கூறியது.

"நீண்ட தூர ராக்கெட் பீரங்கிகள், கடற்படை அழிப்பான்கள், ஏவுகணை படகுகள், விமானப்படை போர் விமானங்கள், ஜாமர்கள் மற்றும் எரிபொருள் நிரப்பும் கருவிகள்" அனைத்தும் சீனாவின் ராணுவத்தால் நிறுத்தப்பட்டுள்ளன.

தாய்வான் அதன் சொந்த அரசமைப்பு மற்றும் தலைவர்களுடன் தன்னை இறையாண்மை கொண்ட நாடாகக் கருதுகிறது. ஆனால் சீனா, தாயவானை தன்னிடம் இருந்து பிரிந்த ஒரு மாகாணமாகப் பார்க்கிறது.

அதுமட்டுமன்றி தேவை ஏற்பட்டால் பலவந்தமாக தாய்வான் சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் என சீனா அடிக்கடி கூறி வருகிறது.

தாய்வானின் வான் எல்லைக்குள் அவ்வப்போது சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்து மிரட்டல் விடுப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது. தாய்வானுடனான "மறு இணைவு" 'நிறைவேற்றப்பட வேண்டும்" என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் கூறியுள்ளார்.

தாய்வானை சுற்றி சீனா அடிக்கடி பயிற்சிகளை மேற்கொண்டாலும், தாய்வானின் அதிபர் சாய், புதன்கிழமை அமெரிக்க அவையின் சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியை சந்தித்ததற்குப் பதிலளிக்கும் விதமாகவே, தற்போதைய சுற்றிவளைப்பு கருதப்படுகிறது.

தாய்வான், சீனாவிடமிருந்து "தொடர்ச்சியான சர்வாதிகார விரிவாக்க அச்சுறுத்தலை" எதிர்கொள்வதால், தனது





அரசாங்கம் அமெரிக்கா மற்றும் பிற ஜனநாயக நாடுகளுடன் தொடர்ந்து பணியாற்றும் என்று அதிபர் சாய் இங் வென் சனிக்கிழமை தெரிவித்தார்.

அந்நாட்டின் வெளியுறவுக் குழுத் தலைவர் மைக்கேல் மெக்கால் தலைமையில், தைபேயில் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பில் அவர் இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருவதாக மெக்கால் கூறினார். அது, "போருக்காக அல்ல, அமைதிக்காக" என்றும் அவர் கூறினார்.

தாய்வானை சுற்றி சீனாவின் இந்த மூன்று நாள் ராணுவ ஒத்திகை நடவடிக்கை - "யுனைடெட் ஷார்ப் ஸ்வார்ட்" என்று அழைக்கப்படுகிறது. திங்கள்கிழமை வரை இது நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்டில், கெவின் மெக்கார்த்திக்கு முன்பு அமெரிக்க சபாநாயகராக இருந்த நான்சி பெலோசி தைபேக்கு பயணம் மேற்கொண்டார். அந்த நேரத்தில், சீன ராணுவம் தாய்வானை சுற்றி கிட்டத்தட்ட ஒரு வாரம் போர் பயிற்சிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறுகையில், 'தாய்வான் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி. அதை யாராலும் சீனாவிடமிருந்து பிரிக்க முடியாது. சீனாவின் இறையாண்மை, பிராந்திய உரிமை எப்போதும் துண்டாடப்பட முடியாத ஒன்று. தாய்வானின் எதிர்காலம் அதன் தாய் மண்ணுடன் இணைவதில்தான் இருக்கிறது" என்றார். ●

---

# பயங்கரவாதத்துக்கெதிரான புதிய சட்டமூல...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஏ) வாகனம், கலம், கப்பல் அல்லது வானூர்தியொன்று அதன் தற்போதைய நிலையில் தொடர்ந்திருப்பதைத் தேவைப்படுத்துதல்

(ஐ) மேலதிக அறிவித்தல் வழங்கப்படும் வரை, கலம் அல்லது கப்பலொன்று குறித்துரைக்கப்பட்டதோடு இடப் பரப்பினுள் கடற்பயணத்தைச் செய்யாதிருத்தல்

(ஒ) வானூர்தியொன்று குறித்துரைக்கப்பட்ட வான் வெளிக்கு வெளியே அல்லது அதனுள் பறக்காதிருத்தல்

(ஓ) ஏதேனும் குறித்த அமைவிடத்தில் ஒன்று கூடாதிருத்தல்

(ஔ) குறித்தவொரு கூட்டம், பேரணி அல்லது ஊர்வலத்தை நடாத்தாதிருத்தல் அத்துடன் (க) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடாதிருத்தல்.

இந்த சட்டமானது வரம்பற்ற குற்றங்களை உருவாக்கியுள்ளதோடு அதனால் ஏற்படும் பாதிப்புகள் மிக அதிகமாகும். அதேவேளையில், இவ்வரைபின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத குற்றங்களை வரையறுப்பதற்கான ஆரம்ப எல்லை மிக குறுகியதாக இருப்பதோடு அவை தொடர்பான நிறைவேற்று அதிகாரங்களும் எல்லையற்று வழங்கப்பட்டிருப்பதானது சர்வதேச நியமங்களை மீறுவதாகவே இருக்கின்றது. இதன்மூலம் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்படும் பேச்சு, ஊடக செயற்பாடுகள் மற்றும் ஏனைய ஜனநாயக நடவடிக்கைகள் பயங்கரவாதம் எனும் போர்வைக்குள் ஈர்க்கப்படும் அபாயமும் உருவாகியுள்ளது. இதன் உருவாக்கமே துஷ்பிரயோகத்தை ஏற்பாக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. அரசாங்கத்துக்கெதிரான மக்களின் விமர்சனத்தையும் எதிர்ப்பையும் 'பயங்கரவாதம்' என வரையறுப்பதன் மூலம் அரச அதிகாரிகளுக்கான அதிகாரங்கள் ஈடில்லாத வகையில் வழங்கப்பட்டுள்ளன.

### அசாதாரண சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் கைதுகளும் தடுத்துவைக்கும் அதிகாரமும் தொடரப்படும் நிலை

பயங்கரவாதம் என விரிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட செயல்களுக்கு ஆயுதப்படைகள் மற்றும் கரையோர காவற்படைகளுக்கு கைதுசெய்யும் அதிகாரத்தை விரிவுபடுத்துவது முறையற்றதாகும். மேலும் நீதிமன்ற மீளாய்வில்லாத 'தடுப்பாணை' என்ற நிறைவேற்று அதிகாரத்தைப் பலப்படுத்தி மிக நீண்ட காலத்துக்கு ஒருவரின் பௌதீக தனியுரிமையை அபகரிக்கும் நிலையை ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல. சாதாரண தண்டனைச் சட்டத்தை எல்லா வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளோடும் நடைமுறையில் வைத்திருப்பதே சாலச்சிறந்ததாகும். நீதிமன்ற மீளாய்வற்ற தடுப்பாணை எவ்வகையிலும் நியாயம் காணவே முடியாத ஏற்பாடாகும்.

முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தின்படி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு 48 மணிநேரங்களுக்குள் நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும். தடுப்பாணை வழங்கப்பட்டிருப்பின் அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை நீதவான் வழங்குவார். சந்தேக நபரை விடுதலை செய்யும் அதிகாரம் நீதவானுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில், பிரிவு 28(2)(ப்)(ஈஇ)ன் படி, சந்தேக நபரை கைதுசெய்த பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நியாயமான அடிப்படையில் விண்ணப்பிக்கப்பட்டதாக நீதவான் கருதும் நிலையிலேயே அவரால் குறித்த சந்தேகநபரை விடுவிக்க முடியும்.

பிரிவு 31ன் படி தடுப்பாணையானது பிரதி பொலிஸ்மா அதிபரால் வழங்கப்பட முடியும். முன்னர் இவ்வதிகாரம் பாதுகாப்பு அமைச்சரிடமே இருந்தது. இதன் மூலம் தடுப்பாணை வழங்கும் அதிகாரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு துஷ்பிரயோகிக்கப்படும் வாய்ப்புகளும் அதனால் உருவாகியுள்ளது புலனாகிறது. தடுப்பாணை வழங்கும் அதிகாரத்துக்கான அடிப்படையான காரணங்கள் நீதித்துறை சார் அதிகாரிகளே வழங்கவேண்டும் என்றிருந்த நிலை இல்லாமலாகி தடுப்பாணை வழங்கும் அதிகாரத்தை விரிவுபடுத்தியுள்ளதன் மூலம் அரசாங்கமானது முன்னைய சட்டமூலத்தை கடந்து வந்து மோசமான மனித உரிமை மீறல்களை தெளிவாகவே மேற்கொண்டுள்ளது.

பிரிவு 31(6)ன் படி உருவாக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட தடுத்து வைத்தல் இடங்களானவை நீதிமன்ற அல்லது சிறைச்சாலைகள் அமைப்பின் மேற்பார்வையில்லாமல் பொலிஸாரின் மேற்பார்வையில் இயங்கும் மையங்களாகவே உருவாக்கப்பட்டுள்ளன. தடுத்து வைக்கும் மையங்கள் சித்திரவதை மையங்களாக இருப்பது இலங்கை வரலாற்றில் புதிதல்ல. இச்சட்ட வரைபின் ஏற்பாடானது சித்திரவதையைத் தடுக்கும் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை விதிகளையே மீறுவதாக இருக்கின்றது. சந்தேக நபரொருவர் விசாரணை மேற்கொள்வோரின் காவலில் இருக்கும் காரணம் என்ன? நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் சந்தேகநபரொருவர் காவலில் வைக்கப்படுவதன் மூலம் விசாரணை மேற்கொள்வோரின் நலன்களிலிருந்து வேறாக்கப்பட்டு சந்தேகநபர் பாதுகாக்கப்படுகின்றார். இதன் மூலம் விசாரணைகள் நடைபெறுவது தடுக்கமுடியாததாக மாறுகின்றது. பிரிவு 38ன் படி தடுத்து வைக்கப்படுவதற்கான உயர்ந்தபட்ச கால எல்லை 12 மாதங்களாகும். பிரிவு 41 ஆனது ஒரு சந்தேக நபரின் மீது வழக்கு உருவாக்கப்பட்டு நீதிமன்ற காவலிலிருந்து அகற்றப்பட்டு தடுத்து வைக்கப்படுவதற்கான அதிகாரத்தை பொலிஸாருக்கு

(நாளை தொடரும்)

# மட்டக்களப்பு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் கைபேசி, பணம் திருட்டு

மட்டக்களப்பு, ஏப். 10

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள அரசடி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் திருட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஆலய குருக்களின் கையடக்க தொலைபேசி, 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் திறப்புக் கோர்வை என்பனவற்றை நேற்றுமுன்தினம் காலை இளைஞன் ஒருவர் திருடிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆலயத்தில் வழமைபோன்று ஆலய குருக்கள் பூசை செய்வதற்காக சம்பவ தினமான அன்று காலை 6 மணிக்கு சென்று தனது கையடக்கத் தொலைபேசி மற்றும் தாம் வைத்திருந்த 35 ஆயிரம் ரூபா பணம் ஆலய சாவிக் கோர்வை கியூ.ஆர். அட்டை, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பற்றை வைத்துவிட்டு பூசை வழிபாட்டுக்குச் சென்றுள்ளார்.

பூசையை முடித்துவிட்டு 7 மணியளவில் அறைக்குச் சென்றபோது அங்கு வைத்திருந்த பொருட்கள் திருட்டுப் போயுள்ளது.

இதனையடுத்து ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராவை பார்த்தபோது அதில் இளைஞர் ஒருவர் முகத்தை மறைக்க முகக்கவசம் அணிந்தவாறு அறையினுள் சென்று அங்கிருந்த பொருட்களை திருடிக்கொண்டு செல்வது பதிவாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உகண்டாவுக்கு பணம் கொண்டு சென்றிருந்தால் மீட்டு வாருங்கள்!

## ஜனாதிபதி, அரசை கோருகிறார் நாமல்

கொழும்பு, ஏப். 10

ராஜபக்ஷக்கள் உகண்டாவுக்கு பணம் கொண்டு சென்றிருந்தால், ஜனாதிபதியும் அரசாங்கமும் தலையிட்டு பணத்தை அதே விமானங்களில் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு, அநுரகுமார திஸநாயக்கவின் அல்லது சஜித் பிரேமதாஸவின் அரசாங்கம் வரும் வரை காத்திருக்க தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு பணத்தை கொண்டுவந்தால் சர்வதேச நாணய நிதியத்துக்கு பின்னால் சென்று அரச நிறுவனங்களை விற்பனை செய்யத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மலையகத்திலும் பாதுகாப்புடன் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடு!

நுவரெலியா, ஏப். 10

உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் நேற்று உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

உலக மீட்பராக அவதரித்த இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மூன்று தினங்களின் பின்னர் உயிர்த்தெழுந்ததை கொண்டாடும் வகையில் உயிர்த்த ஞாயிறு கடைப்பிடிக்கப்படுகிறது.

பாதுகாப்புக்கு மத்தியில் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வழிபாடு அட்டன் திருச்சிலுவை ஆலயத்தில் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலய பங்கு தந்தை நியூமன் பீரிஸ் தலைமையில் இந்த உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு விசேட கூட்டுத்திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், பக்தர்களுக்கு ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் புனித தீர்த்தமும் வழங்கப்பட்டன.



இதன்போது 2019 ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளின் போது உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவர்களின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு வழிபாட்டை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாடகைக்கு வீடு தேடிச் சென்ற குழு பெண்ணை தாக்கி நகை கொள்ளை!

## களுவாஞ்சிக்குடியில் துணிகரம்

மட்டக்களப்பு, ஏப். 10

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வீடு வாடகைக்கு தேவை என வீடு ஒன்றுக்குள் உள்நுழைந்த 3 பேர் கொண்ட கொள்ளையர்கள் அங்கு தனிமையில் இருந்த பெண்ணை தாக்கிவிட்டு, அவரிடமிருந்த தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ,

ஒந்தாச்சிமட பிரதேசத்தில் சம்பவ தினமான பிற்பகல் 2 மணிக்கு வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம், வீடு ஒன்று வாடகைக்கு தேவை எனக் கேட்டு அங்கு 3 இளைஞர்கள் சென்று கதை கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து திடீரென பெண் மீது தாக்குதலை நடத்தி அவரின் கழுத்தில் இருந்த சங்கிலி மற்றும் கையில் இருந்த காப்பு என்பவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த பெண்ணை அயலவர்கள் மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர்.

இந்த கொள்ளைச் சம்பவத்தையடுத்து அந்த பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். (அ)






# ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்கின்றது

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 1250 குடும்பங்களுக்கு மியன்மார் நாட்டு அரசாங்கம் வழங்கிய அரிசியைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வின்போது இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**மட்டக்களப்பு, ஏப். 10**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.**

சித்திரை புத்தாண்டினை முன்னிட்டு வறிய நிலையில் உள்ள மக்களுக்கு அரிசிப்பொதிகளை வழங்கும் பணி வர்த்தக வாணிபத்துறை அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மியன்மார் அரசாங்கத்திடம் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் விசேடமாக இந்த அரிசி வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுமார் 1250 குடும்பங்களுக்கு தலா 20 கிலோ வீதம் இந்த அரிசியை வழங்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (அ)

# இலவச உர விநியோகம்



நிந்தவூர், ஏப். 10

காரைதீவு கமநல சேவைகள் மத்திய நிலைய பிரிவுக்குட்பட்ட விவசாயக்கண்டங்களின் விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் ரி.எஸ்.பி. எனப்படும் அடிக்கட்டு உர விநியோகம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது.

காரைதீவு கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோத்தர் எம்.சிதம்பரநாதனின் நெறிப்படுத்தலிலும், நேரடி கண்காணிப்பிலும் இந்த இலவச உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு சீராக இடம்பெற்று வருகின்றது.

காரைதீவு கமநல சேவைகள் மத்திய நிலையப் பிரிவிலுள்ள நான்கு விவசாயக் கண்டங்களின் நெல் விவசாயிகள் இந்த இலவச ரி.எஸ்.பி உரத்தைப் பெற்றுப் பயனடையவுள்ளதாகவும், 472.56 ஹெக்ரேயர் நெற் காணிகளுக்கு இந்த உரம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோத்தர் சிதம்பர நாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில்சிறுபோக நெல்விதைப்பு வேலைகள் தற்சமயம் ஆரம்பமாகியுள்ளதால் மேற்படி இலவச உரமான ரி.எஸ்.பியின் அவசியம் கருதி, இந்த உரத்தைப் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோத்தர் சிதம்பர நாதன் தலைமையில் காரைதீவு கமநல சேவைகள் மத்திய நிலையத்தில் குறித்த இலவச உர விநியோக ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராசன் உட்பட விவசாயப் போதனாசிரியர், கமக்காரர் அமைப்புக்களின் பிரதி நிதிகள், முக்கியஸ்த்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தவிரவும், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (யூஎஸ்.எய்ட்) நிதி உதவியுடன் 36000 மெற்றிக்தொன் ரி.எஸ்.பி. உரம் இலங்கைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

இலங்கையின் 25 மாவட்டங்களிலுமுள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான நெல் விவசாயிகளுக்கு இலவசமாக இந்த உரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-06)

# 10 மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை தளபாடங்கள் வழங்கல்

அக்கரைப்பற்று, ஏப். 10

கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அஸ் ஸூஹறா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.எஸ். ஆர் மஜீதிய்யாவின் வேண்டுகோளுக்கிணங்க தரம் 4 ,5 மாணவர்களின் பாவனைக்காக 10 மில்லியன் பெறுமதியான ஒரு தொகுதி பாடசாலைத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை மாலை குறித்த நிகழ்வு நடைபெற்றது. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹூதுல் நஜீமிடம் உத்தியோகபூர்வமாக பாடசாலைத் தளபாடங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் அதிபர் உட்பட பாடசாலை சமூகத்திடம் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் கல்விச் செயற்படுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ளவேண்டுமாக இருந்தால் அடிப்படை வசதிகளான தளபாடங்கள், வகுப்பறைகள் என்பன நன்றாக அமைந்திருத்தல் வேண்டும் என்ற தொனிப்பொருளில் குறித்த பாடசாலை தளபாடங்களை பாடசாலையின் தரம் 01 க்கான பெற்றோர்கள் இணைந்து வலயக்கல்வி பணிப்பாளரிடம் கையளித்தனர். (அ)





"எங்கள் மாணவர்களின் கல்வியில் விளையாடாதே"

# சாய்ந்தமருதுவில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

அக்கரைப்பற்று, ஏப். 10

சாய்ந்தமருது கமு மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர்கள், பெற்றார், பாடசாலை நலன் விரும்பிகள் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று பாடசாலை முன்றலில் இடம்பெற்றது.

இங்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், பிரதான கோரிக்கையாக திருமதி றிப்கா அன்சார் எனும் பெண் அதிபரை அதிபராய் தொடர்ந்தும் இருக்க வழி விடுங்கள் என்று கோரப்பட்டது.

இதில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், இப்போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால் முழு பாடசாலைச் சமூகத்தையும் ஒன்றிணைத்து கல்முனை வலயக் கல்வி அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என சூளுரைத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெண்கள் எனப் பலரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அல் மனார் மத்திய கல்லூரி புதிய அதிபராக உபைதுல்லா



அக்கரைப்பற்று, ஏப். 10

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக இப்றாலெவ்வை உபைதுல்லா கடந்த 7ஆம் திகதி தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பாடசாலை வளாகத்திலிருந்து அழைத்து வரப்பட்ட புதிய அதிபர் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் எம்.ஜே.எம்.ஹஸீபிடமிருந்து பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டார் பொறுப்பேற்கும் நிகழ்வில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல் பிரதி அதிபர் எம்.ஹஸ்மி மூஸா ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினார் .

மேலும் இந்நிகழ்வில் அல்-மனார் ம.க வின் பிரதி அதிபர்கள் எம்.எம்.எம்.அனஸ், எம். ஹஸ்மி மூஸா , முன்னாள் வலய கல்வி பணிப்பாளர் அப்துல் ஜெலீல், பெண்கள் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் எம். அனஸ் மர்சூக், உதவி அதிபர் எஸ்.முபாறக் , ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிமானிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (அ)

# திருமலை-கொழும்பு ரயிலுடன் மோதுண்டு இரு யானைகள் பலி!

## ரயில் தடம் புரண்டது

திருமலை, ஏப். 10

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் பயணித்த இரவு தபால் ரயிலில் ஹபரணை பகுதியில் இரண்டு காட்டு யானைகள் மோதுண்டு உயிரிழந்துள்ளன என ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக குறித்த ரயில் தடம் புரண்டுள்ளது. இருப்பினும் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ரயில் பாதையை திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் திருகோணமலையில் கடந்த 7 ஆம் திகதி ரயில் தடம்புரண்டு விபத்து ஏற்பட்டிருந்த நிலையில், மீண்டும் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது. (அ)

# இப்படியும் ஒரு பிரச்னை!



பிரேசிலியா, ஏப். 10

6 பெண்களைத் திருமணம் செய்து உல்லாசமாக வாழ்ந்து வரும் இளைஞர் ஒருவருக்குப் புதிதாக ஒரு பிரச்னை ஏற்பட்டுள்ளது. அது இந்த ஆறு பேரில் யாரை முதலில் கர்ப்பம் தரிக்கச் செய்வது என்பதானாம்.

பிரேசில் நாட்டின் சாவோ பாலைவனப் பகுதியில் வசித்து வரும் 37 வயது நபர் ஆர்தர் ஓ உர்ஸோ. இவர் தற்போது 6 பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார்.

இந்த உறவுகளைத் தவிர ஏற்கெனவே ஆர்தர் வேறு சில பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அவர்களை விட்டு பிரிந்துள்ளார். அந்த வகையில் இதுவரை அவருக்கு 10 திருமணங்கள் நடைபெற்றன என்று குறிப்பிடுகிறார். மேலும் பழைய திருமண உறவின் மூலம் 10 வயதில் ஒரு மகள் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி உல்லாசமாக வாழ்ந்துவரும் ஆர்தருக்கு ஒரு புதிய பிரச்னை வெடித்துள்ளதாம். அது என்னவென்றால் தனது ஒவ்வொரு மனைவியிடத்திலிருந்தும் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்தில் இருக்கும் ஆர்தர் அதனை எப்படி செயல்படுத்துவது என தெரியாமல் விழி பிதுங்கியுள்ளாராம்.

ஏனெனில், 6 பேரில் ஒருவர் மட்டும் கர்ப்பமாக்கி விட்டு மற்றவர்களை அதிருப்தியில் ஆழ்த்த தனக்கு மனமில்லை என்பதால் இந்த குழப்பம் நீடிப்பதாக ஆர்தர் கூறியிருக்கிறார். ஆகையால் இந்த நிலையை ஏற்படுத்தாமல் இருக்க 6 இல் முதல் மனைவியான லூவானாவின் கரு முட்டையை வைத்து வாடகைத்தாய் முறையில் குழந்தை பெற்றெடுக்கும் முயற்சியில் இறங்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்படி செய்வதால் ஆறு பேரில் எவருக்கும் எந்த மனக்கசப்பும் ஏற்பட்டுவிடாது என்றும் அவர் கருதுகிறார். அத்துடன், இந்த வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றெடுக்கும் முறைக்காக 40,798 அமெரிக்க டாலர் அதாவது சுமார் ஒரு கோடியே 48 இலட்சம் ரூபாய் வரை செலவிட ஆர்தர் தயாராக இருக்கிறாராம். (ஐ)

# தாய்வானை மிரட்டும் பயிற்சி; சீனா நிதானம் காட்டவேண்டும்

## அமெரிக்கா இராஜதந்திர எச்சரிக்கை



கலிபோர்னியா, ஏப். 10

தாய்வானை அச்சுறுத்தும் விதமாக அதிக பலத்தைப் பயன்படுத்தி தாய்வான் எல்லைக்குள் நடத்தும் பயிற்சியில் சீனா நிதானம் காட்ட வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

தாய்லாந்து ஜனாதிபதி சாய் இங் -வென்னின் அமெரிக்க பயணத்தைத் தொடர்ந்து சீனா தாய்வானை சுற்றி நேற்று இரண்டாவது நாளாகவும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டது. இந்த நிலையிலேயே அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாவது நிலை அதிகாரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தாய்வானுக்கு கடுமையான எச்சரிக்கை என்று பீஜிங்கால் அழைக்கப்படும் இந்தப் பயிற்சிக்கு 'கூட்டுவாள்' (Joint Sword) என்று பெயரிட்டுள்ளது. இந்தப் பயிற்சி இன்று திங்கட்கிழமை வரை தொடரும் என்று சீனா அறிவித்துள்ளது.

இந்தப் பயிற்சியில் டசின் கணக்கான போர் விமானங்களும் 9 போர் கப்பல்களும் தாய்வான் எல்லைக்குள் புகுந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

தாய்வான் ஜனாதிபதி அமெரிக்க சபாநாயகர் கெவின் மெக்கர்த்தியை சந்தித்ததைத் தொடர்ந்தே இந்தப் பயிற்சியை தாய்வானை எச்சரிக்கும் விதமாக சீனா நடத்தி வருகிறது. சீனாவின் இந்த அத்துமீறிய பயற்சி நடவடிக்கையால் தாய்வான் கோபமடைந்துள்ளது.

"சீனா மிகப்படுத்தக் கூடாது" என்று அமெரிக்கா கூறியுள்ளது. அத்துடன், "பீஜிங்கின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் "என்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பிரிவின் இரண்டாம் நிலை அதிகாரி கூறி யுள்ளார்.

அத்துடன், "நமது தேசிய பாதுகாப்பு கடமைகளை நிறைவேற்றப் போதுமான வளங்கள் மற்றும் திறன்கள் இந்தப் பகுதியில் உள்ளன", என்றும் சீனாவுக்கு இராஜதந்திர ரீதியிலான எச்சரிக்கை ஒன்றை அவர் விடுத்துள்ளார். ஏனெனில், முன்னதாக பல சந்தர்ப்பங்களில் சீனா தாய்வானை தாக்கினால் அமெரிக்கா தலையிடும் என்று கூறியுள்ளது. இதனை அமெ ரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் பல தடவைகள் பகிரங்கமாக கூறியமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், தாய்வான் மறுபடியும் சீனாவுடன் இணைந்தாக வேண்டும் என்பதில் சீனா உறுதியாக உள்ளது. (ஐ)

# அமெரிக்க கத்தோலிக்க சபையில் 600 சிறுவர், சிறுமிகள் துஷ்பிரயோகம்!

## 156 பாதிரியார்கள் மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஏப். 10

அமெரிக்காவின்போல்டிமோர் நகரை தலைமையிடமாக கொண்டு செயல்படும் கத்தோலிக்க சபையில் 600 சிறுவர், சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பாக 156 பாதிரியார்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணம், போல்டிமோர் நகரில் 233 ஆண்டுகள் பழமையான கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. இது போல்டி மோர் கத்தோலிக்க சபையின் தலைமை தேவாலயம் ஆகும். இந்த தலைமை தேவாலயம் மற்றும் இதன் கீழ் செயல்படும் தேவாலயங்களில் பணியாற்றும் பாதிரியார்கள் மீது தொடர்ச்சியாக பாலியல் புகார்கள் எழுந்து வந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக மேரிலேண்ட் சட்ட மா அதிபர் அன்ரனி பிரவுண் கடந்த 2018ஆம் ஆண்டில் விசாரணையைத் தொடங்கினார். கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்ற விசாரணையின் அடிப்படையில் அவர் 463 பக்கங்கள் கொண்ட விரிவான அறிக்கையை வெளியிட்டார். அதில் பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன.

அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:

அமெரிக்காவின் முதல் கத்தோலிக்க திருச்சபை, போல்டி மோர் திருச்சபை ஆகும். இதன் கீழ் 153 தேவாலயங்கள், 59 பாடசாலைகள், 24 பாதிரியார் பயிற்சி பாடசாலைகள், 26 கன்னியாஸ்திரி பயிற்சி கல்லூரிகள் செயல்படுகின்றன.

1940ஆம் ஆண்டு முதல் போல்டிமோர் தலைமை தேவாலயம் மற்றும் அதன் கீழ் செயல்படும் தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகளில் சுமார் 600இற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். அரசு தரப்பு விசாரணையின்படி 156 பாதிரியார்கள், சிறுவர், சிறுமிகளை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி இருந்தமை தெரியவந்துள்ளது.

ஆனால், திருச்சபை நிர்வாகம் அனைத்து தவறுகளையும் மூடி மறைத்துள்ளது. மத ரீதியான ஆலோசனைக்கு வந்த சிறுவர், சிறுமிகளையும் பாதிரியார்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கி உள்ளனர். எதிர்ப்பு தெரிவித்த சிறுவர், சிறுமிகளை, பாதிரியார்கள் மிரட்டி உள்ளனர். சிலரின் பெற்றோரையும் மிரட்டி உள்ளனர். கத்தோலிக்க திருச் சபை நிர்வாகம் சம்பந்தப்பட்ட பாதிரியார்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதேவேளை, இந்த எண்ணிக்கை உண்மையில் அதிகமாக இருக்கும் என்றும் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன், குற்றச்சாட்டுக்கு உள்ளான பாதிரியார்கள் பலர் உயிரிழந்து விட்டனர். சிலர் மட்டுமே உயிருடன் உள்ளனர். அவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மட்டுமன்றி போர்த்துக்கல், இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் பாதிரியார்கள் மீதான பாலியல் புகார்கள் அதிகரித்து வருவது அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. (ஐ)

# ரக்கூன் நாய் மூலமே கொரோனா பரவியது!

## சீனா புதிய அறிக்கை

பீஜிங், ஏப். 10

கொரோனா வைரஸ் விலங்குகளிடமிருந்து தான் மனிதர்களுக்கு பரவியதாக சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் எங்கிருந்து பரவியது என்ற மர்மம் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், சீன ஆராய்ச்சியாளர்கள் புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

சீனாவின் வுஹான் ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா வைரஸ் பரவியதாக அமெரிக்கா கூறி வருகிறது. இதேநேரத்தில் சட்டத்துக்கு விரோதமான விலங்கு கடத்தல்கள் கொரோனாவை ஏற்படுத்தி இருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். இந்த நிலையில், கொரோனா உருவாகி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சீன ஆராய்ச்சியாளர்கள் வுஹான் சந்தையில் இருந்து எடுக்கப்பட்ட உயிரியல் ஆதாரங்களின் ஆய்வின் முதல் முடிவை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து சீன ஆராய்ச்சியாளர்கள் தரப்பில் கூறும்போது, "வுஹான் சந்தையிலிருந்து எடுக்கப்பட்ட பரிசோதனை முடிவுகளில் (இந்தப் பரிசோதனையில் ரக்கூன் நாய்களும் எடுத்துக் கொள்ளப்பட்டன) அவை காட்டு விலங்குகளின் மரபணுக்களை கொண்டிருந்தது தெரிய வந்தது. இதன்மூலம் கொரோனா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதருக்கு பரவியுள்ளது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது" என்று தெரிவித்துள்ளது. இதன் மூலம் வுஹான் சந்தையிலிருந்து கொரோனா வைரஸ் பரவியது என்பதை உறுதி



செய்வதற்கான சான்றுகள் கூடுதலாகியுள்ளன.

முன்னதாக "விலங்குகளிடமிருந்தே கொரோனா வைரஸ் மனிதர்களுக்குப் பரவியது என்ற தனது ஆராய்ச்சி முடிவு பொய்யல்ல. உண்மையானது" என்று பாரிஸ் விஞ்ஞானி ஃப்ளாரன்ஸ் டெபார் தெரிவித்து வந்தார். இந்த நிலையில், சீனாவின் நோய் தடுப்புத் துறையின் பரிசோதனைகளும் இதைத்தான் கூறியுள்ளன.

கடந்த 2019ஆம் ஆண்டின் இறுதியில், சீனாவிலிருந்து பரவிய கொரோனா தொற்றால் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மும்பையை பந்தாடியது சென்னை சுப்பர் கிங்ஸ்

மும்பை, ஏப். 10

ரஹானேவின் அதிரடியான துடுப்பாட்டத்தால் மும்பை இந்தியன்ஸ் அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது சென்னை சுப்பர் கிங்ஸ்.

158 ஓட்டங்கள் இலக்கை துரத்திய சென்னை அணிக்கு வழக்கம் போல கொன்வே, கெய்க்வாட் தொடக்கம் கொடுத்தனர். ஆனால், முதல் ஓவரிலேயே கொன் வேயை ஓட்டம் பெறாமலே வெளியேற்றினார் பெஹ்ரன்டோர்ப். இதன்பின்னர் வந்த மூத்த வீரர் அஜிங்கியா ரஹானே. இந்தத் தொடரில் சென்னை அணிக்காக ஏலம் எடுக்கப்பட்ட ரஹானே, ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார்.

வழக்கமாக கெய்க்வாட்தான் அதிரடி காட்டுவார். ஆனால், ரஹானே புகுந்து விளையாடினார். பெஹ்ரன் டோர்ப்பின் இரண்டாவது ஓவரில் சிக்ஸ் அடித்து அதிரடியை ஆரம்பித்தார். அர்ஷத் கான் வீசிய ஐந்தா வது ஓவரில் மட்டும் ஒரு சிக்ஸ், 4 பௌண்ட்ரிகள் உட்பட 23 ஓட்டங்கள் சேர்த்தார்.

அதிரடியை தொடர்ந்த ரஹானே 19 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். பியூஸ் சாவ்லா ஓவரில் தொடர்ந்து இரண்டு பௌண்ட்ரிகளை அடித்து அரைச்சதம் கடந்த அவர், 27 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள் மற்றும் 3 சிக்ஸ ர்களுடன் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 8ஆவது ஓவரில் சாவ்லாவின் பந்தை தூக்கி அடிக்க முயல அது சூரியகுமார் யாதவ் பிடியெடுக்கப்பட்டது.

ரஹானே ஆட்டமிழந்த பிறகு கெய்க்வாட், ஷிவம் துபே பெரிய ஷொட்கள் ஆடாமல் நிதானமாக ஓட்டங் களை சேர்த்தனர். 28 ஓட்டங்கள் எடுத்திருந்த ஷிவம் துபேவை குமார் கார்த்திகேயா நடையைக்கட்ட வைத் தார்.

அடுத்து வந்த அம்பதி ராயுடு 11ஆவது பந்திலேயே முதல் பௌண்ட்ரி அடித்தார். எனினும், இலக்கு குறை வாக இருந்ததால், சென்னை அணி எளிதாக வென்றது. 11 பந்துகள் மீதமிருந்த நிலையில், 159 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றிபெற்றது.

கடைசி வரை ஆட்டமிழக்காத, கெய்க்வாட் 40 ஓட்டங்களும், அம்பதி ராயுடு 20 ஓட்டங்களும் எடுத்தி ருந்தனர். நடப்பு தொடரில் இதுவரை 3 போட்டிகளில் விளையாடிய சென்னை பெறும் இரண்டாவது வெற்றி இது. மும்பை அதேநேரம், விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியை தழுவியது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சுபர் கிங்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி களமிறங்கிய அணித் தலைவர் ரோஹித் ஷர்மாவை 3ஆவது ஓவரில் ஆட்டமிழக்க செய்தார் துஷார் தேஷ்பாண்டே. 21 ஓட்டங்களில் ரோஹித் ஷர்மா நடையைக் கட்ட இஷான் கிஷன், கமரூன் கிறீன் கைகோத்தனர்.

இஷான் கிஷன் 21 பந்துகளில் 32 ஓட்டங்கள் என நன்றாக ஆடிக்கொண்டிருந்தாலும் ஜடேஜா வீசிய பந்தில் பிடியெடுப்பாகி வெளியேறினார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் ஓர் ஓட்டத்துடன் நடையைக்கட்ட 8 ஓவர் முடிவில் 3 விக்கெட்களை இழந்த மும்பை அணி 73 ஓட்டங்களை சேர்த்தது.

கமரூன் கிறீன் அடித்த பந்து நேராக ஜடேஜாவை நோக்கி வர கண்களை மூடி கையை நெற்றிக்கு நேராக நிறுத்த பந்து கையில் மாட்டிக்கொண்டது. 4ஆவது விக்கெட்டையும் பறிகொடுத்தது மும்பை. அடுத்து அர்ஷத் கானும் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். திலக் வர்மா எல். பி. டபள்யூ. ஆனார். அப்போது 13 ஓவர்களில் 6 விக்கெட் இழந்து 103 ஓட்டங்களுடன் மும்பை தடுமாறியது.

டிம் டேவிட் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி என வெளுத்து வாங்கி ஆட்டமிழந்தார்.

ஹிருத்திக் ஷோக்கீன், பியூஸ் சாவ்லா இணைந்து இறுதியில் போராட நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் மும்பை அணி 8 விக்கெட்டை இழந்து 157 ஓட்டங்களைச் சேர்த்தது.

சென்னை அணி தரப்பில் ரவீந்திர ஜடேஜா அதிக பட்சமாக 3 விக்கெட்களையும், மிட்ஷெல் சாட்னர், துஷார் தேஷ்பாண்டே ஆகியோர் தலா 2 விக்கெட்களை யும், சிசண்டா மகல ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இலங்கையுடனான ரி - 20; நியூசிலாந்து த்ரில் வெற்றி!

குயின்ஸ்லாந்து, ஏப். 10

இலங்கைக்கு எதிரான 3ஆவது இருப துக்கு 20 போட்டியில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்களால் த்ரில் வெற்றி பெற் றுள்ளது.



இதையடுத்து, இலங்கைக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என்ற கணக்கில் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான இருபது -20 போட்டி நியூசிலாந்தின் குயின்ஸ்டவுனில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பாக குசல் மெண்டிஸ் 73 ஓட்டங்களையும், குசல் பெரேரா 33 ஓட்டங்களையும், பெத்தும் நிசங்க 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்தின் பென் லிஸ்டர் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

இந்நிலையில் 20 ஓவர்களில் 183 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, ஒரு பந்து மீதமிருக்க 6 விக்கெட் களை இழந்து, வெற்றி இலக்கை கடந்து, 4 விக்கெட்க ளால் த்ரில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் டிம் சீபர்ட் 88 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் லஹிரு குமார 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும், தொடரின் ஆட்ட நாயகனாகவும் நியூசிலாந்து அணியின் டிம் சீபர்ட் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# டில்லி அணியை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்!



டில்லி, ஏப். 10

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

16ஆவது ஐ. பி. எல். தொடர் 11ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியும் ராஜஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஜோஸ் பட்லர் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். 8 ஓவர் வரை விக்கெட்டைப் பறிகொடுக்காமல் இருவரும் அணிக்கு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யஷஸ்வி ஜெய்ஸ்வால் 60 ஓட்டங்களில் முகேஷ் குமார் வீசிய பந்தில் அவுட்டானார்.

அவருக்கு அடுத்து வந்த சஞ்சு சாம்சன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். றியான் பராக் 7 ஓட்டங்களில் கிளம்ப மறுபுறம் பட்லர் நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களை சேர்த்துகொண்டிருந்தார். அதனால் ராஜஸ்தான் அணி 16 ஓவர் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்களை சேர்த்திருந்தது. பட்லருக்கு உறுதுணையாக நின்று ஹெட்மேயர் சிக்ஸர்களை பறக்க விட்டுக்கொண்டிருந்தார். டில்லி அணிக்கு தண்ணி காட்டிய பட்லரை முகேஷ்குமார் 79 ஓட்டங்களில் பெவிலியனுக்கு அனுப்பினார்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்களை இழந்த ராஜஸ்தான் அணி 199 ஓட்டங்களை சேர்த்தது. ஹெட்மேயர் 21 பந்துகளில் 39 ஓட்டங்களுடனும், துருவ் ஜூரல் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். டில்லி அணி தரப்பில் முகேஷ்குமார் 2 விக்கெட்களையும், குல்தீப் யாதவ், றோவ்மேன் பவல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து களமிறங்கிய டில்லி அணியின் தொடக்க ஆட்டக்காரர் பிரித்வி ஷா இரண்டாவது பந்திலேயே ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அடுத்த 2 பந்துகளில் மனிஷ் பாண்டே கிளம்பினார். முதல் ஓவரில் ஓட்டம் எதுவுமின்றி 2 விக்கெட்களை பறிகொடுத்த சோகத்தி லிருந்த டில்லிக்கு 14 ஓட்டங்களில் விக்கெட்டாக்கி வேதனையை அதிகப்படுத்தினார் றிலீ றோசோ.

தனித்து போராடினார் டேவிட் வோர்ணர். அவருக்கு தோள் கொடுத்த லலித் யாதவ் 38 ஓட்டங்கள் வரை போராடி சேர்த்துவிட்டு சென்றாலும், அடுத்தடுத்து வந்த அக்சர் பட்டேலும், றோவ்மேன் பவலும் சொல்லி வைத்தார் போல 2 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பி பொறுப்பற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் 16 ஓவர் முடிவில் 6 விக்கெட்டை இழந்து 118 ஓட்டங்களுடன் தடுமாறியது டில்லி.

அபிஷேக் போரல் 7 ஓட்டங்களில் வந்த வேகத்தில் திரும்ப, 55 பந்துகளில் 65 ஓட்டங்களை சேர்த்து நிலைத்து ஆடிய வோர்ணரும் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லியை தோற்கடித்தது ராஜஸ்தான்.

ராஜஸ்தான் அணி தரப்பில் யுவேந்திர சாஹல், ட்ரெண்ட் போல்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்களை யும், அஸ்வின் 2 விக்கெட்களையும், சந்தீப் ஷர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ஐ)

## மருமகனால் மாமியார் தாக்கப்பட்டு கொலை!

கொழும்பு, ஏப். 10

மருமகனால் தாக்கப்பட்டு மாமியார் கொலை செய்யப் பட்டுள்ளார்.

குருநாகல் - பொல்பிதிகம - அலுத்வெகெதர பிரதேசத் தில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது. இதில், 59 வயது பெண்ணே உயிரிழந்தார்.

கொலையான பெண், தனது கணவன் மற்றும் மருமகனுடன் வாக்குவாதத் தில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, அவரின் மரு மகனால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸ ார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அவ ரின் கணவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்பு டைய சந்தேக நபர் தலை மறைவாகியுள்ளார். அவரைக் கைதுசெய்யப் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளனர். (ஐ)

## நான்கு வருடங்கள் கடந்தும் இன்னமும் நீதி கிட்டவில்லை!

### பேராயர் கர்தினால் ரஞ்சித்



கொழும்பு, ஏப். 10

**உயிர்த் ஞாயிறு தாக்குதல்கள் நடந்து 4 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் நீதி கிடைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனையின்போது கருத்து தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை,

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்கள் இடம்பெற்று நான்கு வருடங்களாகின்றன. இன்ன மும் நீதி கிடைக்கவில்லை. என்ன நடந்தது என்பது இன்ன மும் எவருக்கும் தெரியாது.

மக்கள் பல்வேறு விதமான விட யங்களை தெரிவிக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், நாங்கள் உண்மை நீதிக்காக போராட வேண்டும். அதுவே கிறிஸ்தவ மதம் என் றும் கர்தினால் மேலும் தெரி வித்தார். (ஐ)

## லொத்தர் சபைக்கு ரூ. 300 கோடி இலாபம்!

கொழும்பு, ஏப். 10

லொத்தர் சபைக்கு வரலாற் றில் முதல் தடவையாக 300 கோடி ரூபாய் இலாபத்தை பதிவு செய்ய முடிந்ததாக தேசிய லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன கூறியுள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத் தில் நடைபெற்ற அபிவிருத்தி லொத்தர் வெற்றியாளர்களுக் கான நிதி காசோலை வழங்கும் பிரதான வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கோவிட் தொற்று காரண மாக நாட்டில் ஏற்பட்ட பொரு ளாதார மற்றும் அரசியல் சவால் களால் நாட்டின் தனியார் மற் றும் அரச துறைகள் கடுமையா கப் பாதிக்கப்பட்டன.

எனினும், அதனை அச்ச மின்றி எதிர்கொண்டு சிறந்த நிர்வாகத்துடன் தேசிய லொத் தர் சபை தனது இலக்குகளை எட்டியுள்ளது.

தேசிய லொத்தர் சபை புதுப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை என புதிய வர்த் தக நாமத்தில் செயல்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)



## பத்து வாகனங்களை மோதி தள்ளிய கிரேன்!

### நால்வர் படுகாயம்

கொழும்பு, ஏப். 10

கம்பஹா, பஸ்யால - மீரிகம வீதியின் கல்எலிய நகரில் நிறுத் தப்பட்டிருந்த 10 வாகனங்க ளோடு கிரேன் வாகனம் ஒன்று மோதியதுடன் மதிலை உடைத் துக் கொண்டு வீடு ஒன்றையும் மோதியுள்ளது. இந்த சம்பவத் தில் 4 பேர் படுகாயமடைந்துள் ளனர் எனவும் கூறப்படுகிறது.

பஸ்யாலவிலிருந்து மீரிகம நோக்கி பயணித்த கிரேன் வாக னம் மக்கள் நெரிசல் மிகுந்த கல்எலிய நகர வீதியில் அதி வேகமாக பயணித்து, வீதியோ ரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

அத்துடன், அந்த கிரேன் வாகனம் ஒரு வீட்டின் மதில் மற்றும் கதவுகளையும் உடைத் துக்கொண்டு சென்று, வீட்டின் மீது மோதியபடி நின்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள் ளனர். (ஐ)

## அமெரிக்க கடற்படை கப்பல் திருகோணமலைக்கு வந்தது

கொழும்பு, ஏப்.

அமெரிக்காவின் யு. எஸ். என். எஸ். பிரன்சுவிக், என்ற கடற்படையின் போக்குவரத்து கப்பல் நேற்று முன்தினம் திரு கோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

இது, அமெரிக்க கடற்படை கட்டளையின் விரைவுப் போக்கு வரத்துக் கப்பல் ஆகும். துருப் புக்கள் மற்றும் இராணுவ உப கரணங்கள், உள்-திரையரங்கு மற்றும் போக்குவரத்தை வழங் கும் திறன் கொண்ட இந்த கப்ப லில் 1200 கடல் மைல் தூரத் துக்கு 600 தொன் உபகரணங் களை எடுத்துச் செல்ல முடியும். இதன் சராசரி வேகம் மணிக்கு 25 கடல் மைல்கள் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பலுக்காக இந்த கப்பல் திருகோண மலைக்கு வந்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தல் ஆணைக்குழு நாளை கூடுகின்றது!

கொழும்பு, ஏப். 10

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக தேர் தல் ஆணைக்குழு நாளை செவ் வாய்க்கிழமை கூடவுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு அதிகாரிகளிடம் தொடர்ந்து பணம் கோரியதற்குரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் இரண்டு தினங்களில் பிரதமரு டன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது. (ஐ)

## ராஜபக்ஷக்களின் கொள்கை அரசியல் நெருக்கடி காலத்திலேயே தேவையாகிறது!

### சாகர காரியவசம் எம். பி.




கொழும்பு, ஏப். 10

நாடு வீழ்ச்சியை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை மீட்டெடுப்ப தற்கு ராஜபக்ஷக்களின் கொள்கை அரசி யலே தேவைப்பட்டது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செய லாளர் சாகர காரியவசம் தெரிவித்துள் ளார்.

கொலன்னாவை பிரதேசத்தில் இடம் பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

“நாட்டில் கடந்த காலங்களில் ஏற் பட்ட முரண்பாடுகளையடுத்து சிறீ லங்கா பொதுஜன பெரமுன வீழ்ந்து விடும் என்றே சிலர் நினைத்தனர். அவ் வாறு இல்லை. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை ஒருபோதும் வீழ்த்த முடியாது. நாடு ஒவ்வொரு சந்தர்ப்பத்தி லும் வீழ்ச்சியை சந்தித்தபோதே ராஜபக் ஷக்களின் கொள்கை அரசியல் இந்த நாட்டுக்கு தேவைப்பட்டது.

யுத்தத்தால் நாடு வீழ்ச்சியை சந்தித்து நாட்டின் பொருளாதாரம் மறை பெறு மானத்துக்கு சென்றிருந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை மீட்டெடுத்து நாட்டை மீண் டும் கட்டியெழுப்பினார். நாடு இரண்டாக பிளவுபட்டுவிடும் என்று கருதப்பட்ட சந்தர்ப்பத்திலேயே முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்றார்.

ஐக்கியமிக்க நாடு என்ற ஒரு நிலை மையானது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் உலக நாடுகளில் மக்கள் வீதிகள், மருத்துவமனைகள் முன்பாக விழுந்து மரணிக்கும்போது எமது நாட்டின் தலை வர்கள் மக்களின் உயிரை காப்பாற்றினர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக் குள்ளான எவரையும் மருத்துவமனை களில் அனுமதிக்காது வீடுகளுக்கு செல்ல இலங்கை அரசாங்கம் வழிவகுக்க வில்லை. கொரோனா பெருந்தொற்றில் இருந்தும் நாட்டு மக்களை பாதுகாத்தது சிறீ லங்கா பொதுஜன பெரமுன என் பதை நினைவில் கொள்ள வேண்டும். நாட்டுக்காக எமது கட்சிய ஆற்றும் பணிகள் முடிவடையப்போவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக எமது கட்சியா னது பின்னடைவை சந்தித்தது. நாட்டு மக்கள் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு இருந்தார்.

அதனால் நாட்டை முடக்க வேண் டிய நிலைமை ஏற்பட்டது. நாட்டு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள் ளும்போது நாட்டை நான் பின்னர் மீளகட்டியெழுப்புகின்றேன். அதற்கு முன்பு நாட்டு மக்களது உயிரை பாது காக்க வேண்டும் என்று அவர் கருதினார். கொரோனா பெருந்தொற்றிலிருந்து நாடு மீளும் போது பொருளாதார நெருக்க டியை எதிர்கொள்ள வேண்டிய ஏற்பட் டது“ என்றார். (ஐ - கே)

ஈழநாடு
Eelanadu

## சண்டியர்களாக உலகின் முன் செயல்பட முடியாது!

### அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஏப். 10

உலகத்துக்கு முன் சண்டியர்களாக செயல்பட முடியாது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே போக்குவரத்து அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எந்தவித அரசியல் தலையீடும் இன்றி போக்குவரத்து கூட்டுதானத்துக்கு தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலைமையை மாற்ற என்னால் முடிந்தது.

இதுவரை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் வருமானத்துக்கு அதிகமாகவே செலவு செய்துள்ளனர். எரிபொருள் மின்சாரம் என்பவற்றிலும் இந்த நிலைமை உள்ளது. ஈஸ்டர் குண்டு தாக்குதல் போன்றவற்றால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது.

கோவிட் தொற்றும் வந்தது. அதே போன்று நாம் எடுத்த வரி சுதந்திரம் உள்ளிட்ட தவறான முடிவுகளும் இதற்கு காரணங்களாகும். முன்னைய அரசாங்கமும் எடுத்த கடனை அடுத்து வரும் அரசாங்கம் செலுத்த வேண்டும். உலகத்துக்கு முன் சண்டியளர்களாக செயல்பட முடியாது. ஆகவே, கடனை மீள செலுத்த பிரான்ஸ் நிறுவனத்தின் உதவியை கேட்டுள்ளோம்.

2025 ஆண்டாகும் போது போக்குவரத்துசபையின் பணத்தை வெளிச்செல்ல விடாது. பாதுகாத்தால் அதனை உங்களுக்கு மீள வழங்குவேன் என உறுதியளிக்கின்றேன் - என்றார். (ஐ)

## மட்டு. சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை!

மட்டக்களப்பு, ஏப். 10

மட்டக்களப்பு - பிள்ளையாரடியில் உள்ள சீயோன் தேவாலயத்தில் நேற்று உயிர்த்த ஞாயிறு தின சிறப்பு ஆராதனைகள் பொலிஸ் பாதுகாப்போடு இடம்பெற்றன.

தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் இந்த ஆராதனைகள் நடைபெற்றன.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையில் உள்ள மூன்று தேவாலயங்களில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு மட்டக்களப்பு சீயோன் தேவாலயமும் இலக்காகி - பெருமளவில் சேதமடைந்து - அதில் உயிரிழப்புகள் நேர்ந்ததோடு, மேலும் பலர் பாதிப்படைந்திருந்தனர்.

அதன் பின்னர், இந்த சீயோன் தேவாலயம் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் உள்ள மென்றேசா வீதியில் அமைக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுக்கு பிறகு இம்முறை உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நேற்று நாடெங்கும் உள்ள தேவாலயங்களில் ஆராதனைகள், விசேட வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் பிறிதோர் இடமான பிள்ளையாரடியில் அமைக்கப்பட்ட சீயோன் தேவாலயத்திலும் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது நல்லாசி உரைகள், நாடும் அரசாங்கமும் சிறப்புற வேண்டி சிறப்பு பிரார்த்தனைகளும் நடந்தன. (ஐ)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எதிர்காலத்திலும் தீர்வு இல்லை!

### முஜிபுர் ரஹ்மான் எம். பி.

கொழும்பு, ஏப். 10

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்று நான்கு வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளது. எனினும், இதுவரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியையும், குற்றவாளிகளுக்கு தண்டனையையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. எதிர்காலத்திலும் தீர்வு கிடைக்காது. இதன் பின்னணியில் அரசியல்வாதிகளின் சூழ்ச்சி காணப்படுகிறது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பிறகு, உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இன்றுவரையில் அவரும் மௌனம் காக்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தீவிரவாத முஸ்லிம் குழுவொன்று நடத்தியதாகக் கூறப்பட்டாலும், நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை கொண்டு வருவதற்காகவே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்று 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதில் இன்றுவரையில் இழுபறி நிலை காணப்படுகிறது. இதன் பின்னணியில் சில அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகள் இருப்பதையே இது பிரதிபலிக்கிறது.

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் உண்மைகளை கண்டறிய முன்னதாக காணப்பட்ட குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு பதிலாக புதிய பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகரவை கைதுசெய்ததுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் ரவி செனவிரத்னவையும் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

இவ்வாறு உயர் அதிகாரிகளை விரட்டி தமக்கு சாதகமான புதியவர்களை பதவிகளுக்கு கொண்டு வந்தனர். இருப்பினும், இந்த புதிய குழுவினரால் இன்று வரையில் எதுவித உண்மைகளும் கண்டறியப்படவில்லை.

இதேவேளை மூன்றாவது முறையாக சாராவின் டி. என். ஏ. பரிசோதனையை மேற்கொண்டு அவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கின்றனர். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்துகிறது. காரணம், இவ்வளவு காலம் கண்டறியப்படாத இவ்விடயம் தற்போது திடீரென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாருடைய தேவையை பூர்த்தி செய்வதற்காக மூன்றாவது முறையாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது?

நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக அப்பாவி மக்களின் உயிரை பறித்தனர். இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தி மோதலை உருவாக்கினார்கள். இந்த மோதல்களின் போதும் கலவரங்களின் போதும் பலர் உயிர், சொத்துக்கள், உடைமைகள் என பலவற்றை இழந்தனர்.

எதை எதிர்பார்த்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோ, அதனை சிலர் நிறைவேற்றிக்கொண்டார்கள். இனவாதத்தின் ஊடாக ஆட்சி அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்காகவே மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை மக்களும் தற்போது புரிந்துகொண்டுள்ளார்கள்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவிக்கு வந்த பிறகு உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இன்று வரையில் அவரும் மௌனம் காக்கிறார். எதிர்காலத்தில் தாக்குதல் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கப் போவதுமில்லை. தாக்குதல் மேற்கொண்ட தரப்பினருக்கு தண்டனை கிடைக்கப் போவதுமில்லை - என்றார். (ஐ)

## உதயன் நாளிதழ் பணிமனைக்குள் புகுந்து கிறிஸ்தவ குழு அத்துமீறல்!

யாழ்ப்பாணம், ஏப். 10

உதயன் நாளிதழ் பணிமனை வளாகத்துக்குள் கிறிஸ்தவ சபையை சேர்ந்த போதகர் தலைமையில் சிறுவர்கள், பெண்கள் உள்ளடங்கிய கும்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து முறையற்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிய வருகின்றது.

அச்சுவேலி பகுதியில் உள்ள வீடொன்றினுள் கிறிஸ்தவ மத போதகரின் தலைமையிலான கும்பல் ஒன்று அருகில் இருந்த வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து வயோதிபர் பெண் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், போதகர் , அவரின் மகன் உள்ளிட்ட மூவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

அது தொடர்பில் நேற்றைய தினம் உதயன் நாளிதழில் தகவல் வெளியானது.

செய்தி வெளியான நிலையில் அச்சுவேலியில் இருந்து தமது சபைக்கு சொந்தமான சொகுசு பேருந்து



மற்றும் பட்டா வாகனம் என்பவற்றில் யாழ். நகரில் உள்ள உதயன் பணிமனை வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்துடன், முறையற்ற விதத்தில் அங்கு பணியாற்றுபவர்களையும் கைபேபேசிகளில் காணொலி, ஒளிப்படமாக பதவிட்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உதயன் நாளிதழ் நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது. அங்கு பொலிஸார் வருவதற்கு முன்பாக அந்தக் குழுவினர் அங்கிருந்து சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இல்லத்திலிருந்து சிறுவர்கள் மாயம் முன்னெடுத்த நடவடிக்கைகள் என்ன?

### பொலிஸாரிடம் மனித உரிமைகள் குழு கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 10

திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி முதல் காணாமல்போன இரண்டு சிறுவர்களையும் கண்டுபிடிப்பதற்கு கோப்பாய் பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கடிதம் அனுப்பியுள்ளார்.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்திலிருந்த இரண்டு சிறுவர்களை கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் காணவில்லை எனவும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியவில்லை என்றும் செய்திகள் வெளியாகின.

இந்த செய்தியின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது சொந்தப் பிரேரணையாக எடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், காணாமல்போன சிறுவர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியாமைக்கான காரணத்தையும், அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் இன்று திங்கட்கிழமைக்குள் தெரியப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.